Registered as a Newspaper. பக்கங்கள்: பத்து

விலை ரூபா 10.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 04 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 22 (19.06.2006) திங்கட்கிழமை இதழ் 261

யாழ்.நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சுவேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# உச்சநிலையில் இருக்குமாறு முப்படைகளுக்கும் உத்தரவு!

கொழும்பு—

நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்துமாறும் - முப்படையினர் மற்றும் பொலிஸாரை அதி உச்ச விழிப்பு நிலையில் வைத்திருக்குமாறும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துள்ளார்.

கெப்பிற்றிக்கொல்லாவ கிளைமோர் தாக்குதல் மற்றும் அதற்குப் பதிலடியான வான் தாக்குதல்கள், பேசாலை கடற்சண்டை ஆகியவற்றையடுத்தே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் உள்ள இராணுவ நிலைகள், எல்லையோர சிங்களக் கிராமங்கள், தென்பகுதியில் பொருளாதார இலக்குகள் என்பன தாக்குதலுக்குள்ளாகக் கூடுமென்று புலனாய்வுத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், கொழும்புத் துறைமுகத்துக்குள் தாக்குதலுக்கான முயற்சியும் தென்பகுதியில் பாதுகாப்புத் தொடர்பான சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இதையடுத்தே (10 ஆம் பக்கம் பார்க்க)

## துறைமுகங்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு—

கொழும்பு உள்ளிட்ட நாட்டிலுள்ள அனைத்து துறைமுகங்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக துறைமுக அதிகார சபை நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

துறைமுகத்துக்கு வெளியிலிருந்தும், உள்ளே சென்றும் தாக்குதல் நடத்த முடியாத அளவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கடற்படையினரும், துறைமுக (10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் கேள்விகளுக்கு நாளைக்குள் புலிகளின் பதில்!

கிளிநொச்சி—


போர்நிறுத்த ஒப்பந்தம் தொடர்பாக நோர்வே அரசாங்கம் கேட்டிருந்த ஐந்து வினாக்களுக்கான விடுதலைப் புலிகளின் பதில் - நாளைக்குள் புலிகளின் தலைமைப்பீடத்தால் அனுப்பி வைக்கப்படும் என சமாதான செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்தார்.

நோர்வே அரசாங்கத்தால் அனுப்பப்பட்ட ஐந்து கேள்விகள் தொடர்பாகவும், இதற்கு அரச தரப்பால் அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் பதில் தொடர்பாகவும் - தமிழீழ தேசியத் தொலைக்காட்சிக்கு பேட்டியளித்தபோதே புலித்தேவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

நோர்வேயின் கேள்விகளுக்கு அரசு கொடுத்த பதிலில் கண்காணிப்புக்குழுவின் பாதுகாப்புக்கு அரசு மட்டும்தான் பொறுப்பு எனக்கூறப்பட்டுள்ளது.

அதாவது, சமதரப்பு என்பதை அரசு கேள்விக்குரியதாக்கியுள்ளது. இது, நிச்சயம் தமிழ்மக்கள் தமக்கென



ஒரு அரசை அமைத்துக் கொண்டு வந்தால் (10ஆம் பக்கம் பார்க்க)

## கிளைமோர் தாக்குதலில் மூன்று பொலிஸார் பலி!

வவுனியா—

வவுனியா - துட்டவெவ பகுதியில் பொலிஸாரின் பவுசர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

வவுனியா - ஹொரவப்பொத்தான வீதியில் உள்ள துட்டவெவ என்ற இடத்தில் உழவு இயந்திரத்துடன் இணைக்கப்பட்ட பௌசர் ஒன்றில் நீர் எடுக்கச் சென்ற பொலிஸ்மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் அதில் பயணம் செய்த 3 பொலிஸாரும் உயிரிழந்தனர்.

இதில்சார்ஜன்ட் சுகதபால, கொன்ஸ்டபிள்களான ஜெயவர்த்தன, இந்திரபால ஆகியோரே உயிரிழந்தவராவர்.

சம்பவம் நடைபெற்ற துட்டவெவ பகுதி வவுனியாவில் இருந்து தென்கிழக்கே 12 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## கிழக்கு கடல் பிராந்தியத்தில்

## பேசாலை தாக்குதலில் சிக்கியது

# கிழக்கு கடல் பிராந்தியத்தில் உசார் நிலையில் கடற்படை!

கொழும்பு—

கிழக்குப் பிராந்திய கடற்பரப்பில் எந்தச் சவாலையும் எதிர்கொள்வதற்குத் தயாரான நிலையில் கடற்படையினர் இருப்பதாக கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் தளபதி தெரிவித்தார்.

திருமலை கடற்படைத் தளத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கடற்படையினருக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருப்பது தற்கொலைத் தாக்குதல் படகுகள்தான். ஆனால், அவற்றையும் எதிர்கொள்ள கடற்படையினர் தயாராகவே உள்ளனர்.

முன்னர் புலிகளின் ஆதிக்கத்துக்குள் இருந்த முல்லைத்தீவு கடற்பரப்புக்கும் கடற்படை தனது ஆதிக்கத்தை விரிவுபடுத்தியுள்ளது.

இதேவேளை, மீன்பிடிப் படகுகளை புலிகள் வெடிபொருள் கடத்தலுக்கு பயன்படுத்துகின்றனர். இது குறித்து கடற்படை உசாராகவே உள்ளது என்றும் கிழக்கு கடற்படைத் தளபதி மேலும் தெரிவித்தார்.

# பேசாலை தாக்குதலில் சிக்கியது கடற்படை கொமாண்டோக்களே

கொழும்பு—

மன்னார் - பேசாலைக் கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் கடற்புலிகளுடனான மோதலில் கொல்லப்பட்ட கடற்படையினர் - விசேட கொமாண்டோக்கள் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விசேட படகு படைப்பிரிவு (Special Boat Squadron) எனப்படும் கடற்படையின் விசேட கொமாண்டோக்களின் படகுகளே கடற்புலிகளின் தாக்குதலுக்குள்ளாகின.

இந்தத் தாக்குதலின்போது கடற்புலிகள் பீரங்கிகளை உபயோகிக்கவில்லை என்றும்-50 கலிபர் துப்பாக்கிகள் மற்றும் கிரனேட் லோஞ்சர்களை மட்டுமே பயன்படுத்தியதாகவும் படைத்தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

சம்பூரில் உள்ள கடற்புலிகளின் தளங்கள்மீது கடற்படைப் படகுகள் நடத்திய பீரங்கித் தாக்குதல்களுக்கு பதிலடியாகவே கடற்புலிகள் பேசாலையில் உள்ள கடற்படையின் துணைத் தளம் மீது தாக்குதல் மேற்கொண்டதாக கடற்படை அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

அதேவேளை, பேசாலையில் கடற்படையின் விசேட கொமாண்டோக்கள் நிறுத்தப்பட்டிருந்தது - புலிகளுக்கு அதிர்ச்சியைக் கொடுத்திருக்கும் என்றும் படையதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க கடற்படையின் விசேட கொமாண்டோ அணியான சீல் படைப்பிரிவு போன்று ஆயுததளபாடங்களையும், (10ஆம் பக்கம் பார்க்க)

# கடற்படைப் படகுகளை தகர்க்க புதியவகை காந்தக் குண்டுகள்!

## பொலிஸ்மா அதிபர் தகவல்



கொழும்பு—

கடற்படைப் படகுகளை தகர்க்கும் நோக்குடன் புலிகள் புதிய வகையான காந்தக் குண்டுகளை பயன்படுத்துவதற்கு முனைந்திருப்பதாக பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ தெரிவித்தார். நீர்கொழும்பு பமுனுகம மற்றும் வென்னப்புவ பகுதிகளில் மீட்கப்பட்டிருக்கும் அதிசக்தி வாய்ந்த குண்டுகள் பற்றி செய்தியாளர்களிடம் பேசியபோதே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பமுனுகமவில் கைதுசெய்யப்பட்ட ஐவரிடமும் இந்தக் (10ஆம் பக்கம் பார்க்க)

# இரு படையினரை காணவில்லை

கொழும்பு—

வெலி ஓயா பகுதியில் நேற்று இடம்பெற்ற தாக்குதல் ஒன்றையடுத்து 2 படையினர் காணாமல் போயிருப்பதாக ரொய்ட்டர் செய்தி வெளியிட்டது.

கொக்குத்தொடுவாய்க்கும், ஜனகபுரவுக்குமிடையில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற இந்தத் தாக்குதலின் பின்னர் படையினர் பலர் சிதறி ஓடி காணாமல் போயினர்.

இவர்களில் இருவரைத் தவிர, ஏனையோர் (10ஆம் பக்கம் பார்க்க)

# ஹெலிகளை ஏற்றிய கப்பலை நீர்கொழும்பில் தகர்க்க முயற்சி

## பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம்

கொழும்பு—

நீர்கொழும்பு - பமுனுகம கடற்பகுதியில் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட சுழியோடிகள் - விமானப்படைக்குச் சொந்தமான இரு ஹெலிகளை ஏற்றிவந்த கப்பல் ஒன்றைத் தாக்கி மூழ்கடிக்கத் திட்ட மிட்டிருக்கலாம் என பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

உக்ரேனுக்கு திருத்தப் பணிக்காக அனுப்பப்பட்ட விமானப்படையின் இரண்டு எம்.ஐ. -17 ஹெலிகளை ஏற்றிய கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக்கப்பலைக் குண்டு வைத்து தகர்க்கவே கைதுசெய்யப்பட்ட சுழியோடிகள் முயற்சித்ததாக சந்தேகிக்கப்படுகிறது.


தலா 35 கிலோ எடையுள்ள மூன்று குண்டுகள் வென்னப்புவ மற்றும் நீர்கொழும்பு கடற்கரையில் இருந்து மீட்கப்பட்டிருந்தன. பைபர் கவசமிடப்பட்ட (10ஆம் பக்கம் பார்க்க)



# உலகக் கிண்ணம் - 2006


## கானா புரிந்த மாயாஜாலம்











கொலொக்னே —

நான்கு ஆட்டங்கள் முடிவடைந்த நிலையில் பிரிவுகள் A, B, C யில் இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெறும் அணிகள் தீர்மானிக்கப்படக்கூடிய தாக இருந்தும் பிரிவு E ஐப் பொறுத்து நிலைமை தெளிவாக இல்லை. இதற்கு ஆபிரிக்க நாடான கானா, செக்.குடியரசை 2:0 என்று வீழ்த்தி யது இன்னும் ஊகங்களுக்கு இடம் கொடுத்துவிட்டது.

இது ஒருபுறம் இருக்க ஏற்கனவே செக்கின் பலமறிந்திருந்த ரசிகர்கள் கானா பற்றிக் குறைவாக மதிப்பிட்டி ருந்தால் அவர்கள் அதிர்ச்சியில் உறைந்துபோய் இருப்பார்கள்.

ஏனெனில் ஆட்டம் தொடங்கி இரண்டாவது செக்கனில் கானாவின் அஸமோவா கயான் முதலாவது கோலைப்போட ஆட்டம் திடீரென்று தீப்பிடித்துக்கொண்டது.

இதன்பின் எண்பத்து இரண்டா வது நிமிடத்தில் சலி முன்டாகி இரண் டாவது கோலையும் போடவே கானா 2:0 என்று வெற்றியைத் தழுவி இர ண்டாம் சுற்றுக்கு யார் வருவார்கள் என்று புதிய ஊகங்களுக்கு வழிவ குத்துவிட்டது.

கானாவின் தீவிர தாக்குதலுக்கு தைரியமாக முகம்கொடுத்து அற்புத மாகச் செயற்பட்ட செக் கோல்காப் பாளர் பீட்ர் செக் எல்லோரது மனதி லும் பதிந்தார்.

உண்மையில் மிகப்பலமான செக் அணியின் சாம்ராஜ்யத்துக்குள் முழுமையாகக் கானா அணி ஆக்கி ரமித்து நின்றதென்றால் அவர்களின் தீரம் புரிந்திருக்கும். அதுமட்டுமல்ல கானா வீரர்கள் தமக்குள் பந்து பரி மாறிய நேர்த்தியும், கூடுதலான நேரம் தமது ஆதிக்கத்துக்குள்ளேயே வைத்திருந்தமையும் மிகுந்த வியப் பாக இருந்தது.

இதுபோலவே செக்.குடியரசின் நட்சத்திரம் ஜன்கொலர் ஆட்டத்தில் பங்குகொள்ளாது கானாவுக்கு கொஞ் சம் சுதந்திரத்தைக் கூடுதலாகவே கொடுத்துவிட்டது என்பதும் உண்மை தான்.

இறுதி நேரத்தில் செக் சில முயற்சி களை முன்னெடுத்தாலும் எங்கும் நீக்கமற நிறைந்திருந்த வெண்ணிற உடை செக்கைக் கட்டிப்போட்டுவிட் டது.

மறுவளமாக செக் கோல்காப்பா ளர் இறுதி நேரத்தில் பல கானா எறி கணை வீச்சுக்களைத் தகர்த்தாலும், முண்டாரியின் உதையொன்று அக் கினிப் பந்தாக வலைக்குள் நுழைந்து விட்டது.

ஆனாலும் துரதிஷ்டவசமாக கானா சார்பில் கோல்போட்ட அஸ்மோ கயான் மற்றும் முண்டாரி இருவருக் கும் இரண்டு தடவைகள் மஞ்சள் அட்டை காட்டப்பட்டதனால் - இறுதி லீக் போட்டியில் அமெரிக்காவுடன் விளையாட முடியாத நிலையைத் தோற்றுவித்துவிட்டது ரசிகர்களைப் பொறுத்து துயரமான விடயமே.

இப்போதுள்ள கேள்வி பிரிவு நு இல் வெளியேறத் தயாராக இருக்கும் அணிகள் எவை? அப்படி எவையை யும் சுட்டிக்காட்டமுடியவில்லை.

## ஒழுங்கீனத்தில் சாதனை





கைசர்ஸ்லோரேரன் —

ஐக்கிய அமெரிக்க-இத்தாலி அணி களுக்கு இடையிலான போட்டியில் ஒரு சாதனை நிகழ்த்தப்பட்டிருக் கிறது. உலகக்கிண்ணப் போட்டியொ ன்றில் மூன்று வீரர்கள் வெளியேற் றப்பட்டது இது நான்காவது முறை யாகும். இதில் இருவர் ஐக்கிய அமெ ரிக்க வீரர்கள். ஒருவர் இத்தாலி அணி வீரர்.

இத்தாலி வீரர் 28 ஆவது நிமிடத் தில் வெளியேற்றப்பட, இடைவே ளையை அண்டி ஐக்கிய அமெரிக்க வீரர்கள் வெளியேற்றப்பட்டனர்.



எனவே ஆட்டத்தின் நீண்ட நேரம் ஐக்கிய அமெரிக்கா ஒன்பது வீரர்க ளுடனும், இத்தாலி பத்து வீரர்களு டனும் களமாடினர்.

இறுதியில் ஆட்டம் 1:1 என்று சமனிலையில் முடிவடைந்தது. ஆட் டத்தின் இருபத்தியிரண்டாவது நிமி டத்தில் FREE KICK ஒன்றை அன் ரியா பிர்லோ லாவகமாக அடிக்க அல் பேர்ட்டோ கிளார்டினோ HEADER மூலம் கோலாக்கினார்.

அதனைத்தொடர்ந்து ஐக்கிய அமெரிக்காவுக்கு உடனடியாகவே கோல் ஒன்று கிடைத்தது. அது இத்தாலிய வீரர் ஸகார்டோ அடித்த OWN GOAL ஆகப் போய்விட்டது.

இரண்டு அணிகளுமே வழமை போலவே மாறி மாறி எதிரணிப் பிரதேசங்களை ஆக்கிரமித்தாலும் யாரும் கோல் போடமுடியவில்லை. ஆனால், இரு அணிகளும் மத்தியஸ் தரின் திருப்தியைச் சம்பாதிக்கும் வகையில் விளையாடவில்லை என் பது தெரிந்தது.

உண்மையில் உருகுவே மத்தி யஸ்தர் லொறிண்டா மிகக் கண்டிப் புடன் நடந்து கொண்டதால்தான் பிற் பகுதியாவது ஓரளவு கட்டுப்பாட்டுடன் இருந்தது என்கிறார்கள் விமர்சகர்கள்.

இருந்தாலும் விமர்சகர்களின் பார்வையில் ஐக்கிய அமெரிக்கா பரிதாபமான அணியாகத்தான் காட் டப்படுகிறது. காரணம் ஆட்டத்தின் அரைவாசி நேரத்தை ஐக்கிய அமெரி க்கா ஒன்பதே ஒன்பது வீரர்களுடன் மட்டும் சமாளித்துக்கொண்டதுதான்.



இனி ஐக்கிய அமெரிக்கா கானா வைச் சந்திக்கும் ஆட்டங்கள்தான் இரண்டாம் சுற்றுக்கான இரண்டு அணிகளையும் தீர்மானிக்கும்போல் தெரிகிறது.

## இன்றைய ஆட்டங்கள்

| | |
|---|---|
| ரோகோ - சுவிற்சர்லாந்து G பிரிவு | (டோட்மண்ட் 6.30) |
| சவுதி அரேபியா - உக்ரெய்ன் H பிரிவு | (ஹம்பேர்க் 9.30 ) |
| ஸ்பானியா - டுனீஷியா H பிரிவு | (ஸ்குட்காட் 12.30) |

## முன்னேற்றம் தேவை



நுரெம்பேர்க் —

குரோஷியாவுக்குக் கிடைத்த பனால்டி வாய்ப்பை ஜப்பானிய வீரர் ஜொசி கட்சூ கவாகுச்சி தடுத்து நிறுத்தியதால் நேற்று F பிரிவில் நடை பெற்ற ஆட்டம் சமனி லையில் முடிவுற்றது.



41 ஆயிரம் ரசிகர் கள் ஆவலுடன் மைதா னத்தில் காத்திருக்க ஜப்பான் - குரோஷிய அணிகள் நேற்று மாலை பலப்பரீ ட்சை நடத்தின.

21 ஆவது நிமிடத்தில் குரோஷிய அணிக்கு ஒரு பனால்டி வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், குரோஷிய வீரர் செர்னா பந்தை உதைத்த போதும், ஜப்பானிய வீரர் கவாகுச்சி அந்த வாய்ப்பை அவர்களுக்கு கிடை க்கவிடாமல் தடுத்து நிறுத்தினார்.

அதேவேளை, இதன் பின்னரும் கிடைத்த வாய்ப்புக் கள் குரோஷியாவுக் குக் கிடைத்த வாய்ப் புக்கள் கவாகுச்சியால் கைநழுவிப் போயின.

இதனால் கடைசி நேரம் வரை இரு அணிகளும் கோல் எதையும் போடா மல் ஆட்டம் சமனிலையில் முடிவுற்றது.

இந்தப் போட்டியின் நாயகனாக கிடிதோசி நகாட்டா தெரிவு செய்யப் பட்டார்.



இதனால் இரு அணிகளுக்கும் தலா ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப் பட்டன.

# போர் மூண்டால் இலங்கைக்கு ஒரு துரும்பும் வழங்கக்கூடாது

## இந்திய அரசிடம் வைகோ வேண்டுகோள்



மதுரை —

போர் மூண்டால் ஒரு துரும்பைக் கூட இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா வழங்கக்கூடாது என்று மதுரையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தி கேட்டுக் கொண்டார்.

இலங்கைத்தமிழர் பகுதியில் உண்மையான நிலையை கண்டறிந்து பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு ஆறுதல் கூறவும், இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுவை உடனே அனுப்பக்கோரியும், இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு இந்திய பிரதமரைச் சந்தித்து பேச உடனடியாக நடவடிக்கை எடுக்கக்கோரியும், தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பாக மதுரை தமுக்கம் மைதானம் அருகே தபால் சந்தி அலுவலகம் முன்பு நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ தலைமை தாங்கி பேசியதாவது -

இலங்கையில் அநுராதபுரம் அருகே பஸ் கண்ணிவெடியில் சிக்கி 64 பேர்கள் பலியாகியுள்ளார்கள். குழந்தைகளும், பெண்களும் கூட இதில் பலியாகியுள்ளனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டிக்கும் அதே சமயத்தில், இந்தச் சம்பவத்துக்கும் எங்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்று விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துவிட்டது.

ஆனால், இலங்கை இராணுவமோ, விடுதலைப் புலிகள் தான் காரணம் என்று அறிவித்துவிட்டு, தமிழர் பகுதியில் கோர குண்டுவீச்சு தாக்குதலை நடத்திவருகிறது. யார் செய்தது? என்று கண்டுபிடித்துவிட்டு நடவடிக்கை எடுக்கவேண்டியது தான் இலங்கை அரசின் பொறுப்பு. ஆனால், தாக்குதல் நடத்தப்படுவதற்குப் பின்னணி என்ன?

ஜெனிவாவில் நடந்த பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் செல்லவில்லை. இலங்கை அரசு போர் நிறுத்தத்தை அறிவிக்கவில்லை. ஆனால், போர்நிறுத்தத்தை அறிவித்தவர்கள் புலிகள் தான்.

போர்முனையில் வெற்றியைச் சந்தித்த பின்னர் தான் விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்தனர்.

போர்நிறுத்தத்தை அறிவித்துவிட்டு தாய்லாந்தில் பேச்சுவார்த்தை தொடங்கி அது முறையாக நடைபெற்றது. அதை முறியடிக்க இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா முயற்சித்தார்.

அதற்குப் பிறகு சர்வதேச நாடுகளின் சார்பாக வந்த கண் காணிப்புக்குழு தமிழர் பகுதியில் போர் செய்வது விதிமுறைகளை மீறிய செயல் என்று சொன்னது.

இலங்கையில் நடப்பது உள்நாட்டு பிரச்சினை அல்ல. போர் மூளக்கூடும் என்ற அபாய கட்டம் இப்போது இருக்கிறது.

இலங்கையில் போர் மூண்டால் எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்திய அரசு - இலங்கை அரசுக்கு ஒரு துரும்பைக்கூட தூக்கிப் போடக்கூடாது. இலங்கைக்கு உதவி செய்தால், அது ஒட்டுமொத்த தமிழர்கள் மீது நடத்தப்படும் தாக்குதலாகவே கருதப்படும். தடைகளால் சுதந்திர தாகத்தைத் தடுத்துவிட முடியாது.

இப்போதைய இலங்கைப் பிரச்சினையில் தமிழ் மக்களின் உணர்ச்சிகள் நீறுபூத்த நெருப்பாக இருக்கிறது. எப்போதுமே இலங்கைத் தமிழர்கள் பக்கமே தமிழ்நாட்டு மக்கள் இருப்பார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - மதுரையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் தியாகு, சேலம் ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி, கவிஞர் அறிவுமதி, கோவை ஆர்ப்பாட்டத்தில் பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கோவை.ராமகிருட்டிணன், தஞ்சையில் தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி செயலாளர் பெ.மணியரசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## மற்றொருவர் மரணம்

கொழும்பு —

அநுராதபுரம் - கெப்பிட்டிக்கொல்லாவ கிளைமோர் தாக்குதலில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை உயிரிழந்தார்.

இந்தத்தாக்குதலில் இவருடன் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 66 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை இந்தத்தாக்குதலில் காயமடைந்த 64 பேர் அநுராதபுரம் வைத்தியசாலையிலும், 7 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## சமுர்த்தி அலுவலர் காயம்

மட்டக்களப்பு —

மட்டக்களப்பில் சமுர்த்தி அலுவலர் ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவத்தில் கருணாநிதி (வயது 38) என்ற சமுர்த்தி அலுவலரே மாவடிவேம்பு என்ற இடத்தில் பஸ்ஸில் சென்று கொண்டிருந்த போது கடந்த வியாழக்கிழமை காலை 9 மணியளவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

படுகாயமுற்ற இவர் - மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பயங்கரவாதத்துக்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கை

### கெகலிய ரம்புக்வெல எச்சரிக்கை



கொழும்பு —

எதிர்காலத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் கெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அனைத்து இன மக்களையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும். சமாதான நடைமுறைகளை முன்னெடுக் கும் அதேவேளை தேசிய பாதுகாப்புக் குறித்து அரசாங்கம் மிகக் கடுமையாக இருக்கும்.

இனப்பிரச்சினைக்கு சமாதான வழிமுறைகளினூடாகத் தீர்வு காணப்பட்டாலும் தேசிய பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுவதை அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்காது எனத் தெரிவித்தார்.

## வன்முறைகளைக் கைவிட்டு பேச்சுக்கு திரும்பவேண்டும்

### போருக்கு எதிரான தேசிய அமைப்பு கோரிக்கை

கொழும்பு —

இலங்கையில் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வந்து, சமாதானப் பேச்சுக்களை மீண்டும் தொடங்க வேண்டும் என்று போருக்கு எதிரான தேசிய அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த குழுவொன்று அமைக்கப்பட வேண்டும் என்றும் அந்த அமைப்புக் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கெப்பிட்டிக்கொல்லாவ சம்பவமானது - ஏற்கனவே சீர்குலைந்துள்ள சமாதான முயற்சிகளுக்கு அச்சுறுத்தல் விடுக்கக்கூடியது.

இந்தச் சம்பவமானது - பாரிய ஆத்திரமூட்டல் நடவடிக்கையாகும். இதை நியாயப்படுத்த முடியாது.

இருப்பினும், நீதிக்குப் புறம்பான படுகொலைகளை எமது அமைப்பு முன்பே கண்டனம் செய்துள்ளது.

அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதிகளில் துணை ஆயுதக் குழுக்களும், இதர ஆயுதக் குழுக்களும் இயங் குவதை சுட்டிக்காட்டியுள்ளோம்.

எல்சல்வடோர், கௌதமலா மற்றும் தென்னாபிரிக்காவைப் போல் அப்பாவி மக்களுக்கு எதிரான வன்முறைகளை நிகழ்த்தும் மூன்றாம் சக்திகளை அடையாளம் காண விசாரணை நடத்தவேண்டும்.

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் பேச்சு மேசைக்கு மீண்டும் திரும்பவேண்டும். உடனடியாக பேச்சுக்களைத் தொடங்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இராணுவத்துக்கு உணவு விநியோகம் தடைவிதிக்க உயர் நீதிமன்றம் மறுப்பு

கொழும்பு —

இராணுவத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்துக்குத் தடைவிதிக்க உயர் நீதிமன்றம் மறுத்துள்ளது.

பண்டாரவளையைச் சேர்ந்த அமீஸ் சகோதரர்கள் நிறுவனத்தினர் இது தொடர்பாக நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தனர்.

அந்த வழக்கில் - இராணுவத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான ஒப்பந்தம் நடத்தப்பட்டதில் முறைகேடுகள் நடந்துள்ளதால், இந்தப் பொருட்கள் விநியோகத்துக்குத் தடை கோரி வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழங்கில் இராணுவத் தளபதி, திறைசேரி செயலாளர் உள்ளிட்டோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப் பட்டிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் கே.சிறீபவன் மற்றும் சிசிர டி ஆப்ரியூ ஆகியோர் தடை விதிக்க மறுத்துத் தீர்ப்பளித்தனர்.

## நோர்வேயை வெளியேற்ற வேண்டும் இதுவே ஜனாதிபதியின் விருப்பம்!



கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படும் நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்பது தான் தனது விருப்பம் என ஜே.வி.பி குழுவினரிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதாகக் கொழும்பு ஆங்கில பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜே.வி.பியினருடன் அண்மையில் ஜனாதிபதி மகிந்தராஜபக்ச ஆலோசனை நடத்திய போது நடைபெற்ற விவாதங்களை கொழும்பு ஆங்கில பத்திரிகை வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் இடம் பெற்றுள்ளதாவது -

மகிந்தவுடனான ஜே.வி.பியின் சந்திப்பில் நோர்வே குறித்து விமல் வீரவன்ச் கருத்துகளை முன்வைத்தார்.

அதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ - விடுதலைப் புலிகளுக்குப் பக்கச் சார்பாகத்தான் நோர்வே செயற்படுவது எனக்கும் தெரியும். நோர்வேயை வெளியேற்ற வேண்டும் என்பதுதான் எனது விருப்பமும் கூட. இணைத் தலைமை நாடுகள் தான் பிரச்சினை. அவர்கள் நோர்வேக்காக செயற்படுகின்றனர். இந்தியா தான் எமக்குச் சரர்பாக இருக்கும். எனது கைகள் கட்டப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

இதன் போது இடைமறித்த ஜே.வி.பியின் அனுரகுமார திஸநாயக்க நீங்கள் ஏன் சுயாதீனமாக முடிவெடுக்கக் கூடாது? நீங்கள் அப்படிச் சுயமாக முடிவெடுத்தால் நாங்களும் உங்களை ஆதரிப்போமே என்று கூறியுள்ளார்.

இது போன்ற விடயங்களில் எளிதில் முடிவெடுத்துவிட முடியாது. நாம் அப்படி எளிதாக முடிவெடுத்தால், பாரிய எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று மகிந்த ராஜபக்ஷ பதிலளித்தார் என அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களைப் பாதுகாக்க முடியாவிடின் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுமாறு ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள்

கொழும்பு —

மக்களைப் பாதுகாக்க வேண்டிய முதன்மைக் கடமையைச் செய்ய முடியாவிட்டால், அரசுப் பொறுப்பிலிருந்து விலக வேண்டும் என்று மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதிகாரப் பகிர்வு தொடர்பான சர்வகட்சிக் குழுவுக்காக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் பரிந்துரையைக் கோரி சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன கடிதம் அனுப்பியிருந்தார்.

அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது -

கொகன்னவின் கடிதத்துக்குப் பதிலளித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் என்.கே. வேரகொட பதில் கடிதம் அனுப்பியிருந்தார்.

கொழும்பில் கடந்த வாரம் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் விவகார குழுவின் அறிவுறுத்தலுக்கமைய இந்தக் கடிதத்தை வேரகொட அனுப்பியிருந்தார்.

மேலும் அந்தக் கடிதத்துடன் அறிக்கையொன்றையும் ஐக்கிய தேசியக் கட்சி இணைத்து அனுப்பியது.

பேச்சுக்கள் மூலமான அரசியல் தீர்வு குறித்த அரசாங்கத்தின் கொள்கையைத் தென்னிலங்கை சர்வகட்சிக் கூட்டத்தில் முன்வைக்க வேண்டும்.

அமைதித் தீர்வை உருவாக்க உள்ளதாக அரசாங்கம் கூறுகிறது. ஆனால், என்ன மாதிரியான அமைதித் தீர்வு என்பது குறித்து மக்களுக்கு தெரியப்படுத்தபடவில்லை.

இந்த நிலையில் நாளாந்தம் கொல்லப்படும் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் பொது மக்களினது எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.


இந்த நிலை தொடர அனுமதிக்கக் கூடாது. மக்களைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் முதன்மைக் கடமை. அதைச் செய்யாவிட்டால் அரசாங்கப் பொறுப்பிலிருந்து வெளியேற வேண்டும்.

ரோக்கியோ பிரகடனமானது - இலங்கையின் பிரதேச ஒற்றுமையைப் பாதுகாக்கக் கூடியது. அங்கிருந்து இறுதி அரசியல் தீர்வுக்கான வழி தொடங்கப்பட வேண்டும். இணைத்தலைமை நாடுகள் மற்றும் இந்தியாவுடன் இணைந்து அமைதி முயற்சிகளை மீளச் செயற்படுத்தி, வன்முறைகளை நிறுத்த வேண்டும் என்று அதில் கூறப்பட்டிருந்தது.

ஐக்கிய தேசியக் கட்சியிள் இந்த அறிக்கையை ஆராய்ந்து கொரண்டிருப்பதாகவும், இதற்கு விரைவில் பதில் அனுப்பப்படும் என்றும் பாலித கொகன்ன தெரிவித்தார்.

# கூடுதலான விடுதலைப் புலிகள் கொழும்பிலேயே உள்ளனராம்

## கொட்டகதெனிய தெரிவிப்பு



கொழும்பு—

யாழ்ப்பாணத்தை விட கொழும்பில் தான் கூடுதலான விடுதலைப் புலிகள் உள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் எச்.எம். ஜி.பி கொட்டகதெனிய தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கெப்பிற்றிக்கொல்லாவ தாக்குதல் போல நாடு முழுவதும் எந்த நேரத்திலும் தாக்குதல் நடைபெறக்கூடும்.

விடுதலைப் புலிகளை ஒட்டு மொத்தமாக ஒழிப்பதற்கு உரிய உறுதியான முடிவெடுக்க வேண்டிய நேரம் இது.

நாளாந்தம் பொதுமக்கள் நூற்றுக் கணக்கில் கொல்லப்பட்டு வருகின்றனர். நாட்டின் பல பகுதிகளில் விடுதலைப் புலிகள் ஊடுருவி உள்ளனர்.

நாடு முழுவதும் இப்போது குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஒரு யுத்தத்தில் நாடு மூழ்குகிறது. யாழ்ப்பாணத்தைவிட கொழும்பில்தான் அதிக விடுதலைப் புலிகள் உள்ளனர். கொழும்பு நகரம் பாதுகாப்பற்றது என்பதை மறுப்பதற்கு எதுவித முகாந்திரமும் இல்லை.

இருப்பினும் தாக்குதலைத் தடுப்பதற்காக அதிகபட்ச பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கு இலங்கையில் அவர்களைத் தடை செய்ய வேண்டும். கெப்பிற்றிக்கொல்லாவப் படுகொலையைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் மீது சர்வதேச சமூகம் கடும் நடவடிக்கைமேற்கொள்ளஅரசாங்கம் செயற்பட வேண்டிய நேரம் இது.

தங்களது பழிவாங்கலை வெளிப்படுத்துவதற்காக ஐரோப்பிய நாடுகளில் பிரச்சினைகளை விடுதலைப் புலிகள் ஏற்படுத்துவார்கள். இது நூறு வீதமான உறுதி.

கெப்பிற்றிக்கொல்லாவ படுகொலைகள் குறித்து கண்காணிப்புக்குழுவினர் விசாரணைகளை நடத்துகின்றனர். கண்காணிப்புக் குழுவினர் விடுதலைப் புலிகளுக்குச் சாதகமாக இருப்பது மிகவும் வருத்தத்துக்குரியது.

கொழும்பில் உள்ள முஸ்லிம் மற்றும் சிங்களவர்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் நிதி வசூலித்து தங்களது அமைப்பை வலுப்படுத்தி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசிய மக்கள் பாதுகாப்பு படையை உருவாக்குகிறது அரசாங்கம்

கொழும்பு —

பாதுகாப்பு மற்றும் அபிவிருத்திப் பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்த தேசிய மக்கள் பாதுகாப்புப் படையை அரசாங்கம் விரைவில் தொடங்கவுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இந்தப் படையணி உருவாக்கப்படும். இதன் முதற்கட்ட அணியானது மேற்கு மாகாணத்தில் பிரதி பொலிஸ்மா அதிபர் டி.டபிள்யூ. பிரதாப சிங்க தலைமையில் உருவாக்கப் படும்.

வடக்கு - கிழக்கைப் பாதுகாப்பதற்காகத் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் படையணிக் கட்டுமானத்தை உருவாக்கியதைத் தொடர்ந்தே அரசாங்கம் இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாகக் கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று கருத்து தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் தேசப்பற்றுச் சட்டம் தொடர்பாகவும் அரசாங்கம் தீவிரமாக ஆராய்ந்து வருவதாக கூறப்படுகிறது. போர்ச்சூழலில் எதிர்கொள்ள வேண்டியவை தொடர்பான அரசாங்கத்தின் தேசப்பற்றுச் சட்டத்துக்காக இந்த படிப்பினையை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. தேசப்பற்றுச் சட்டம் விரைவில் நிறைவேற்றப் படவுள்ளது.

அமெரிக்காவின் தேசப்பற்றுச் சட்டத்தின் வழிகாட்டலுக்கு அமையத்தான் தற்போதைய தேசப்பாதுகாப்பு படையணி உருவாக்கப்படுவதாக அமெரிக்கச் சட்டத்தை ஆராய்ந்து வரும் அரசாங்கக் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

# மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூர் சென்றார் இராணுவத் தளபதி



கொழும்பு —

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா மேலதிக சிகிச்சைக்காகச் சிங்கப்பூர் கொண்டு செல்லப்பட்டார்.

இராணுவத் தலைமையகத்தின் மீது நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத்தாக்குதலில் படுகாயமடைந்த இராணுவ தளபதி சரத் பொன்சேகா கடந்த வெள்ளிக்கிழமை சிங்கப்பூர் விமானத்தில் கடும் பாதுகாப்புடன் கொண்டு செல்லப்பட்டார். அவருடன் அவரது மனைவி அனோமா, மருத்துவர் மற்றும் இராணுவ அதிகாரி ஒருவர் ஆகியோர் சென்றனர்.

சரத் பொன்சேகாவின் சிங்கப்பூர் சிகிச்சைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்துள்ளார். சிங்கப்பூரில் சரத் பொன்சேகாவுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகளை அளிக்க சிங்கப்பூர் அதிகாரிகளுடன் உயர் மட்ட ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது.

# இரகசியப் பொலிஸார் 4 ஆம் மாடியில் குமார் ரூபசிங்கவிடம் விசாரணை



கொழும்பு—

போருக்கு எதிரான தேசிய முன்னணி தலைவர் குமார் ரூபசிங்கவிடம் குற்றப் புலனாய்வுப்பிரிவினர் கடந்த வாரம் விசாரணை நடத்தினர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவின் 4 ஆம் மாடியில் 45 நிமிட நேரம் இந்த விசாரணை நடத்தப்பட்டது.

அண்மையில் முஸ்லிம் சபை சார்பாக நடைபெற்ற நிகழ்வில் பேசிய குமார் ரூபசிங்க, போர் உடனே நிகழப்போகிறது என்று கூறியிருந்தார்.

குமார் ரூபசிங்கவின் பேச்சானது நாட்டின் பாதுகாப்புக்கு ஊறுவிளைவிக்க கூடியது எனத் தெரிவித்தே அவரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இது குறித்து குமார் ரூபசிங்க கூறியுள்ளதாவது -

முஸ்லிம் சபையில் கடந்த செவ்வாய்க்கிழமை நான் உரையாற்றினேன். அதில் வடக்கு - கிழக்கு நிலைமைகள் போரை உருவாக்கி வருகின்றன. அப்பாவி மக்களுக்கு மனிதாபிமான அமைப்புகள் உதவ தயாராக இருக்க வேண்டும் என்று கூறினேன்.

மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசையின் பேச்சையும் சுட்டிக்காட்டினேன். உயர்தர பரீட்சைகள் முடிவடைந்த நிலையில் தாக்குதல்களைத் தொடரப் போவதாகப் பொங்கியெழும் மக்கள் படை அறிவித்திருந்ததையும், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தன்னாட்சி அரசாங்கம் குறித்து கூறியிருந்ததையும் குறிப்பிட்டேன்.

அதேபோல் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் நாள் உரையில் இந்த ஆண்டு தங்களது விடுதலைப் போராட்டத்தைத் தொடங்கவுள்ளதாகத் தெரிவித்திருந்ததையும் கூட்டத்தில் பேசும் போது நான் சுட்டிக்காட்டினேன்.

அனைவருமே திரும்ப திரும்ப கூறிவருவதையே நானும் அந்தக் கூட்டத்தில் பேசினேன்.

நான் பேசியமை குறித்து விளக்கம் கேட்டனர். அதற்கான வாக்குமூலத்தை அளித்து வந்துள்ளேன் எனத் தெரிவித்தார்.

# போர்நிறுத்த உடன்படிக்கை அரசாங்கம் முறிக்காது!

## என்கிறார் பாலித கொகன்ன



கொழும்பு —

போர் நிறுத்த உடன்படிக்கையை முடிவுக்குக் கொண்டுவந்து போர் ஒன்றை ஆரம்பிக்கும் தரப்பாக அரசாங்கம் ஒருபோதும் இருக்காது என அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்ன தெரிவித்தார்.

அரசாங்கம் அமைதி முயற்சிகளில் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நோர்வே அனுசரணையாளர்கள் - தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு அழைத்து வருவார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

# அமைச்சர்களின் ஊழல் தொடர்பாக தினமும் 2 அறிக்கைகளை பெறுகிறாராம் ஜனாதிபதி



கொழும்பு —

அமைச்சர்களின் ஊழல்கள் தொடர்பாகத் தினமும் இரண்டு அறிக்கைகளைப் பெற்று வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் கடந்தவாரம் அரசாங்கத்தின் 26 நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆலோசனை நடத்துவதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைத்திருந்தார்.

இந்தக்கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர் அனுர பண்டாரநாயக்க மற்றும் மகிந்தவின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனர்.

அமைச்சரவையிலுள்ள மூத்த அமைச்சர்களின் ஊழல் விவகாரமும் இந்தக்கூட்டத்தில் பேசப்பட்டது.

பிரதி அமைச்சராக உள்ள மகிந்தானந்த அளுத்கமகே, தொழிலாளர் அமைச்சின் ஊழல் குறித்து விபரித்தார். மேலும் பல அமைச்சர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களது ஊழல் விபரங்களை வாசித்தார்.

இதேபோல் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களின் ஊழல் விவகாரங்களை அம்பலப் படுத்திக் கொண்டிருந்தனர்.

நாம் இப்போது தேர்தலுக்கு முகங்கொடுக்க முடியாது. பல அமைச்சர்கள் ஊழல் திருட்டுகளில் ஈடுபடும்போது, ஜனாதிபதி ஏன் அமைதியாக இருக்கிறார் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர் என்றும் சிலர் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அமைச்சர்களின் ஊழல்களை அம்பலப்படுத்திக் கொண்டிருந்தார்.

ஒவ்வொரு நாளும் அமைச்சர்களின் ஊழல் செயற்பாடுகள் தொடர்பான இரு கோப்புகளை நான் பெற்றுக்கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியாது. அதில் பிரச்சினை என்னவெனில், எனக்கு மிக நெருக்கமானவர்கள் தான் இந்த ஊழலைச் செய்கின்றனர். நான் என்ன செய்துவிட முடியும்? அமைச்சரவை மாற்றத்தின் மூலம் தான் எச்சரிக்க முடியும். அதை விரைவில் செய்வோம். சிலர் என் மீது கோபப்படுவர். எனக்கு இதைத்தவிர வேறு வழியில்லை என்று கூறினார்.

இந்த நிலையில் அரசாங்கத்தின் ஊழல் விவகாரத்தைக் கையிலெடுக்க ஜே.வி.பி முடிவு செய்துள்ளது.

இதன்படி முதலில் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் உர ஊழலை வெளியிடப்போவதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க அறிவித்தார்.

அனுரகுமார திஸநாயக்கவின் இந்த அறிவிப்பால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிர்ச்சியடைந்திருப்பதாக கூறப்படுகிறது.

இதனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பியின் தலைவர்களை சமரசப்பேச்சுக்கு அழைத்தார். கடந்த இருவாரங்களுக்கு முன்னர் இந்த சமரசப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அமைதியாகத் தொடங்கிய இந்தப் பேச்சுவார்த்தை ஆவேசமான விவாதங்களுடன் நள்ளிரவு வரை நீடித்துள்ளது.

உர ஊழல் தொடர்பான அனைத்து விபரங்களும் மகிந்தவிடம் கையளித்த அனுரகுமார திஸநாயக்க - விவசாயத்துறை அமைச்சின் ஊழலையும் அம்பலப்படுத்தினார்.

இதையடுத்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிரித்துக்கொண்டே கூறியதாவது-

எனக்கு ஒரு தகவல் கிடைத்தது. அது உண்மையோ பொய்யோ தெரியாது. அமைச்சர்களின் ஊழலை அம்பலப்படுத்துவதன் மூலம் ஜே.வி.பி தனது வாக்கு வங்கியை அதிகரிக்க முடிவு செய்திருப்பதாகச் சிலர் கூறுகின்றனர்.

நீங்கள் அமைச்சர்களின் ஊழலை அம்பலப்படுத்தும் போது அது எனக்கு கெட்ட பெயரை உருவாக்கும். என்னிடம் இந்தத் தகவலைத் தெரிவித்த நபர் கூறியது உண்மையோ, பொய்யோ தெரியாது. ஆனால் உண்மையாக இருக்கும் பட்சத்தில் நாம் எப்படி இணைந்து செயற்பட முடியும்? என்றும் மகிந்த கேள்வி எழுப்பினார்.

ஆனால், ஜே.வி.பியின் அனுரகுமார திஸநாயக்க, மகிந்தவின் கருத்தை நிராகரித்தார்.

உங்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கம் எங்களுக்கு இல்லை. நீங்கள் இந்த நாட்டின் ஜனாதிபதி. உங்களது ஆளுமையை பாதுகாப்பது எப்படி என்று உங்களுக்குத் தெரியும். ஆனால், எப்படி இந்த ஊழல் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிறீர்கள் என்று மக்கள் எங்களை நோக்கி கேள்வி கேட்கின்றனர். அந்தக் கேள்விக்கு நாங்கள் பதில் சொல்லவேண்டும் என்று அனுரகுமார திஸநாயக்க கூறினார்.

இதையடுத்து பிரச்சினையை திசைதிருப்பிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நீங்களும் அமைச்சரவையில் இணைந்து கொள்ளத் தயாரா? என்று கேள்வி கேட்டுள்ளார். ஆனால், ஜே.வி.பியினரோ அமைதி காத்துள்ளனர்.

ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த



பட்டியல்

(புதிய வெளியீடு)

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

மனோகரா யாழ்ப்பாணம்

ஜீவன், சோனியா அகர்வால், விவேக், அப்பாஸ், மாளவிகா மற்றும் பலர் நடித்த

திருட்டு பயலே

காட்சி நேரம் 10.30,2.30,6.30,9.30


நிறைஞ்சனாஸ் சங்கானை

சூரியா, அசின், பிரகாஷ்ராஜ் நடித்த

கஜினி

காட்சி நேரம் : 10.30, 2.15, 5.30

# கெப்பிற்றிக்கொல்லாவ சம்பவம் யாழ்.ஆயர் ஜனாதிபதிக்கு கடிதம்



யாழ்ப்பாணம்

கடந்த 15 ஆம் திகதி கெப்பிற்றிக் கொல்லாவவில் இடம்பெற்ற கோரச் சம்பவத்தால் தாம் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்துள்ளதாக யாழ். ஆயர் தோமஸ் - சவுந்தரநாயகம் ஆண்டகை ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கெப்பிற்றிக்கொல்லாவ நோக்கி சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ் இரு கிளைமோர் தாக்குதல்களால் தகர்க்கப்பட்டுள்ளது. இதில் சிறுவர்கள் உட்பட 66 பேர் கொல்லப்பட்டதுடன் 70 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த தாக்குதலை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். காயப்பட்டவர்களோடும், வேதனை அனுபவிப்பவர்களுடனும் எமது அனுதாபங்களைத் தெரிவித்து இணைந்து கொள்கிறோம்.

இந்தக் கொடூரச் செயலைப் புரிந்தவர்கள் சமாதானத்தின் வழிக்குத் திரும்ப வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம்

யாழ்ப்பாணம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய மகோற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 25 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இந்த விஞ்ஞாபனத்தில் 27 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 30 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், முதலாம் திகதி மாலை 3 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது.

# மண்ணெண்ணெய் கூடிய விலையில் விற்பனை

கொக்குவில்

குடாநாட்டில் மண்ணெண்ணெயை வைத்து கொள்ளையடிக்கும் நிலைமை தொடர்ந்து கொண்டே இருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

யாழ். நகரில் எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றில் குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் 5 லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 250 ரூபா அறவிடப்படுவதாக பாவனையாளர்கள் புகார் தெரிவித்தனர்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யின் விலை முன்னர் 41.50 ரூபா சதம் இப்பொழுது 5 ரூபாவால் அதிகரிக்கப்பட்டிருப்பதால் 46.50 சதமாக இருக்கும் நிலையில் 5 லீற்றருக்கும் 232.50 ரூபாவுக்கே விற்கவேண்டும். ஆனால், இந்த எரிபொருள் நிலையத் தில் 250 ரூபா அறவிடப்படுவதாக மக்கள் தெரிவித்தனர். 17 ரூபா 50 சதம் மேலதிகமாக அறவிடப்படுவது ஏன் என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (206)

# பிரதேச சபை நிர்வாகத்தின் செயலில் ஊழியர்கள் விசனம் தெரிவிப்பு!

பண்டத்தரிப்பு

வலி.மேற்கு பிரதேச சபை நிர்வாகத்தின் அசமந்தப் போக்கால் பிரதேச சபையின் சிற்றூழியர்கள் மற்றும் வெளிக்கள உதவியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்தனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது -

கடந்த வருடத்துக்கான சிற்றூழியர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கான சீருடைத் துணிகள் வழங்கப்பட்ட போதிலும், அதற்கான தையல்கூலிக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

இதனால் வெளிக்கள வேலைகளில் ஈடுபடும் ஊழியர்கள் சீருடையின்றி கடமையாற்றுவதால் தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் இராணுவ நெருக்குவாரங்கள் பலவற்றை சந்திக்கவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், கடந்த இரண்டு மாதங்களாக பிரதேச சபை உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் எழுதுபொருட்கள் எதுவும் வழங்கப்படவில்லை. இதனால் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பாக பிரதேசசபை தலைமைப்பீடத்துக்கு தெரியப்படுத்தப்பட்ட போதிலும் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

பிரதேசசபை நிர்வாகத்தின் இவ்வாறான செயற்பாடுகள்மூலம் தொழில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன், அரசாங்க உத்தியோகத்தர்களின் அடிப்படை உரிமைகளும் மீறப்பட்டுள்ளன.

எனவே, இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் உரிய கவனமெடுத்து ஊழியர்களின் நலனைப் பேண நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (43)

# வடமராட்சி கிழக்கில் 140 வீடுகள் கையளிப்பு

யாழ்ப்பாணம்

வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதிகளில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென அமைக்கப்பட்ட 140 வீடுகளும் கையளிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

எதிர்வரும் புதன்கிழமை காலை 9 மணிக்கு கட்டைக்காடு கிராமத்தில் சோஆ என்ற சர்வதேச அரசசார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்ட 80 வீடுகளும் - அன்றையதினம் பகல் 11 மணிக்கு கரித்தாஸ் - கியூடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 60 வீடுகளுமே உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உட்பட பல்வேறு அரசசார்பற்ற நிறுவனங்கள் உடனடித் தேவையைக் கருத்தில் கொண்டு தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுத்திருந்தன.

இந்த நிலையில் இந்த மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு கையளிக்கப்படுவது இதுவே முதற்தடவை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# எச்.ஐ.வி விழிப்புணர்வு திட்டம்

யாழ்ப்பாணம்

எச்.ஐ.வி நோய் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யாழ். குடாநாட்டில் எச்.ஐ.வி விழிப்புணர்வு பிரிவினர் அரசசார்பற்ற நிறுவனத்துடன் இணைந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்து வருகின்றனர்.

இதன்படி குடாநாட்டில் எச்.ஐ.வி தொற்றுக்குள்ளானவர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் உளவள சிகிச்சை வழங்கப்படவுள்ளது.

அதேவேளை எச்.ஐ.வி தொற்றுக்குள்ளாகும் வாய்ப்பு அதிகமுள்ள பிரிவினரை இனங்கண்டு அவர்களுக்கு விசேட உளவள ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த செயற்திட்டத்துக்கான நிதியுதவியை அரசசார்பற்ற நிறுவனத்திடம் கோரியிருப்பதாகவும், நிதி கிடைத்ததும் விழிப்புணர்வு திட்டம் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





யாழ்.மாநகரசபையின் சுற்றாடல் அபிவிருத்தி அதிகார சபை வீட்டுக் கழிவுப் பொருட்களை பசளையாக மாற்றும் கொள்கலன்களை யாழ்.குடாநாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். அதன் முதற்கட்டமாக ஆரியகுளம் கிராமிய புனர்வாழ்வு குழுத் தலைவர் சதீஸ்குமார் பயனாளி ஒருவருக்கு கொள்கலனை வழங்குவதையும், ஆரியகுளம் கிராமிய புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்களையும் படங்களில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## அலங்கார உற்சவம்

கொக்குவில்

யாழ். ஸ்ரீ விஸ்வலிங்க மகாகணபதி கோவில் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார்) வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தொடங்கி அடுத்த மாதம் 2 ஆம் திகதி வரை 10 தினங்கள் விமரிசையாக நடைபெறவுள்ளது.

தினமும் பிற்பகல் 3 மணிக்கு ஸ்ருபன அபிஷேகத்துடன் தொடங்கி விசேட பூசை, சொற்பொழிவு, சைவ சமயம் பேருரை என்பன இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையை தொடர்ந்து சுவாமி உள்வீதி எழுந்தருள்வார்.

இறுதிநாளான 2 ஆம் திகதி நண்பகல் 12 ம்ணிக்கு மகேஸ்வரபூசை நடைபெறும். (206)

## அடிக்கல் நாட்டும் நிகழ்வு

யாழ்ப்பாணம்

மாரீசன்கூடல் - குதமன்துறை கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கக் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

கெயர் சர்வதேச நிறுவனத்தின் பங்களிப்புடன் இந்தக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

நீண்டகாலம் கூட்டுறவுச் சங்கத்துக்கென தனியான ஒரு கட்டடம் இல்லாமையால், தொழிலாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## பொதுச்சபை கூட்டங்கள்

யாழ்ப்பாணம்

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான பொதுச்சபை கூட்டங்கள் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

கூட்டங்கள் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறவிருப்பதாக யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் தெரிவித்தார்.

## நாடித்துடிப்பு அறியும் கருவி வழங்கல்

யாழ்ப்பாணம்

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு தாயின் வயிற்றிலிருக்கும் சிசுவின் நாடித்துடிப்பை அளவீடு செய்யும் கருவியான டோப்பிளர் மாகாண பிரதி சுகாதார வைத்திய அதிகாரியால் வழங்கப்பட்டது.

கிராமிய மட்டத்தில் பொதுமக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் செயற்திட்டத்தின்கீழ் இந்தக் கருவி வழங்கப்பட்டது.

இதுவரைகாலமும் அச்சுவேலி வைத்தியசாலையில் இந்தக் கருவி இல்லாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : ஹிந்துஜா
முகவரி : யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் ----------
முகவரி ----------
பிறந்த ஆண்டு: ----------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

பெற்றோர் ஒப்பம்


# தமிழ்மொழியில் பேடன்பவல் விருது முதன்முறையாக யாழ். ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம்

காங்கேசன்துறை மாவட்ட திரி சாரணனும், ஜனாதிபதி சாரணனுமான யோ.கேதீசனுக்கு அதி உயர் விருதான பேடன்பவல் விருது கிடைத்துள்ளது. சவால்களுக்கு மத்தியில் இந்த விருதைத் தமிழ்மொழியில் முதல் தடவையாகப் பெற்று சாதனை புரிந் துள்ளார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஓவியர் யோகநாதன் - இராஜேஸ்வரி தம்பதிகளின் புதல்வனான இவர் - யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் முகிழ்நிலை ஆசிரியராகப் பயின்று வருகிறார்.

1991 ஆம் ஆண்டில் யாழ்.வட்டு கார்த்திகேய வித்தியாலயத்தில் குருளைச் சாரணர் பிரிவு அங்குரார்ப்பணம் செய்யும் போது, முதல் முறை விண்ணப்பித்துப் பின் 1993 ஆம் ஆண்டில் யாழ்.வட்டு இந்துக்கல்லூரியில் சாரணர் பிரிவில் பயிற்சி பெற்று, 1994 ஆம் ஆண்டு சின்னம் சூட்டப்பட்டு, 1996 முதல் கிளிநொச்சி பூநகரி மகா வித்தியாலயத்தில் கல்வியைத் தொடரும் போது சாரணர் குழுவை மீள ஆரம்பித்து, கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் தரத்தில் புனரமைப்புச் செய்தும், பூநகரி கோட்ட மாணவர்களுக்குச் சாரணர் பயிற்சிகளை வழங்கி, 1999 ஆம் ஆண்டில் சிறந்த தலைவருக்கான கேடயத்தைக் கோட்டக் கல்வி அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

2000 ஆம் ஆண்டில் இவருக்கு மட்டுமே ஜனாதிபதி விருது கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

திரி சாரணராக தம்மை இணைத்துக் கொண்ட இவர் - மீண்டும் 2002 ஆம் ஆண்டு முதல் காங்கேசன்துறை கிளைச் சங்கத்துடன் இணைந்து யாழ்.வட்டு இந்துக் கல்லூரியில் சாரணர் ஆசிரியராக (சாரணர் தலைவர்) கடமை புரிந்து வருகிறார்.

அத்துடன், மாவட்ட சாரணர் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். சர்வதேச தரத்திலான தலைமைத்துவப் பயிற்சியையும் நிறைவு செய்து வரும் இவர், வடக்கு - கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தி, கடந்த ஐந்து வருடமாக இலங்கை ராணி/ஜனாதிபதி சாரணர் கழகத்தின் ஆயுட்கால உறுப்பினராக இருந்து, இந்த நிகழ்வுகளிலும் கலந்து கொண்டு வருகிறார்.



நீண்ட காலமாக இந்த விருது எவருக்கும் வழங்கப்படாமல் தற்போது பேடன்பவல் விருது தமிழ் மொழியில் இவருக்கு மட்டும் கிடைத்துள்ளது.

இந்த விருதை உறுதிப்படுத்தி கடந்த மாதம் 30 ஆம் திகதி இலங்கை சாரணர் சங்கப் பிரதம ஆணையாளர் எச்.என்.வீரக்கோன் சம்பந்தப்பட்டோருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

# "உயிர் நெய்த வாழ்வு" கவிதை நூல் வெளியீடு

கிளிநொச்சி

வேலணையூர் சுரேஷ் எழுதிய "உயிர் நெய்த வாழ்வு" எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் புதன்கிழமை மாலை 3.30 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - வாழ்த்துரையை நா.தமிழன்பன், சிறப்புரையை செ. இராணிமைந்தன், மதிப்பீட்டுரையை கவிஞர் புதுவை இரத்தினதுரை மற்றும் ஆதிலட்சுமி சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

# இரண்டு மாவீரர்களின் நினைவுக்கல் திரைநீக்கம்

வட்டக்கச்சி

இருவேறு சம்பவங்களில் படையினருடனான மோதலின்போது வீரச்சாவடைந்த இரண்டு மாவீரர்களின் நினைவுக் கற்கள் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

கடந்த 1997 ஆம் அண்டு ஜுன் மாதம் 16 ஆம் திகதி வட்டுக்கோட்டையில் இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவடைந்த வீரவேங்கை யாழமுதன் - என்ற மாவீரரதும் கடந்த 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் திகதி ஓயாத அலை 4 நடவடிக்கையின் போது கிளாலிப் பகுதியில் வீரச்சாவடைந்த வீரவேங்கை - சிவா என்ற மாவீரரதும் திருவுருவப் படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மலர் வணக்கமும், இறுதி வணக்கக் கூட்டமும் இடம்பெற்றது.

தொடர்ந்து கிளிநொச்சி கனகபுரம், துயிலும் இல்லம் மற்றும் முள்ளியவளை மாவீரர் துயிலுமில்லம் ஆகியவற்றில் நினைவுக் கற்கள் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டன. (03)


# மணலாறு களமுனையில் மாதர் சங்க உறுப்பினர்கள்

கிளிநொச்சி

புதுக்குடியிருப்பு பிரதேச மாதர் சங்கத் தலைவர் தலைமையில் மாதர் சங்க அமைப்புகள் ஒன்றிணைந்து மணலாறு பிராந்திய களமுனைப் பகுதிக்குச் சென்று போராளிகளைப் பார்வையிட்டதுடன், கள நிலைமைகள் குறித்தும் கேட்டறிந்தனர்.

நேற்றுமுன்தினம் சென்ற இவர்களை களமுனைத் தளபதிகளில் ஒருவரான றெஜி வரவேற்றார். அங்கு மக்களுக்கான கருத்துக்களை தளபதிகளில் ஒருவரான கஜேந்திரன், குட்டிசிறி மோட்டார் பிரிவைச் சேர்ந்த தமிழ்விழி, பிருந்தா ஆகியோர் வழங்கினர்.

போராளிகளுடன் களநிலைமைகள் குறித்து கலந்துரையாடிய இவர்கள் - தாம் கொண்டு சென்ற உலர் உணவுப் பொருட்களையும் கையளித்தனர். (கு)



பேசாலை புனித வளனார் விக்டோரியா தேவாலயத்தில் நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலை அடுத்து ஏற்பட்ட இரத்தக் கறைகளைக் கழுவும் ஆலய ஊழியர்களைப் படத்தில் காணலாம்.

# ஒரு தபாலகத்தை புனரமைக்கவே நிதி

கிளிநொச்சி

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஆனந்தபுரம், விசுவமடு, முத்து ஐயன் கட்டு, புத்துவெட்டுவான், யோகபுரம், வவுனிக்குளம் ஆகிய இடங்களிலுள்ள தபாலகங்களைப் புனரமைப்பதற்கு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சுக்கு கோரிக்கை விடுத்த போதிலும், ஒரு தபாலகத்தைப் புனரமைப்பதற்கு மட்டுமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இந்தப் புனரமைப்புக்கு ஆனந்தபுரம் தபாலகம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் தபால் போக்குவரத்துக்குரிய வசதிகளை போதுமான வகையில் செய்து தரவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (கு)

# ஆழ ஊடுருவிய இராணுவத்தினரை சுட்டுக் கொன்ற மக்கள் படையினர்

## நேற்றுமுன்தினம் கௌரவிப்பு





வவுனியா

வவுனியா நயினாமடுப் பகுதிக்குள் ஆழ ஊடுருவித் தாக்குதல் நடத்த வந்த இராணுவத்தினரைச் மூன்று நாட்களாக சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தி, அந்த முற்றுகையை உடைத்துச் செல்ல முயன்ற இராணுவத்தரப்பைச் சேர்ந்தவரை சுட்டுக் கொன்ற மக்கள் படையினர் நேற்று முன்தினம் கௌரவிக்கப்பட்டனர்.

நைனாமடுப் பகுதிக்குள் ஊடுருவிய இராணுவத்தினர் மூன்று நாட்களாக விடுதலைப் புலிகள், தமிழீழ தேசிய துணைப்படை மற்றும் மக்கள் படை ஆகியவற்றால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தனர். இந்த முற்றுகையை மக்கள் படையினரின் பகுதி வழியாக உடைத்து வெளியேற இராணுவத்தினர் முயன்றனர்.

அப்போது மக்கள் படை உறுப்பினர் ஒருவரால் இராணுவத்தரப்பைச் சேர்ந்தவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்த நடவடிக்கையில் திறமையுடன் செயலாற்றிய மக்கள் படை உறுப்பினர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் - வவுனியா மாவட்ட கட்டளைத் தளபதி வேலவன், சாள்ஸ் அன்ரனி படையணி சிறப்புத் தளபதி நகுலன், விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் பாராட்டி சிறப்பித்தனர்.

அதிவிசேட பயிற்சிபெற்ற இராணுவத்தைக் குறிபார்த்து சுட்ட மக்கள் படையினர் போராட்ட வரலாற்றில் புதிய அத்தியாயமாக உருவெடுத்துள்ளனர் என இந்த நிகழ்வில் கட்டளைத் தளபதி வேலவன் பாராட்டினார்.

இராணுவத்தைச் சேர்ந்தவரை சுட்டுக்கொன்ற மக்கள் படை உறுப்பினரான ஜெயாவுக்கு சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணி நகுலன் பரிசில் வழங்கி கௌரவித்தார்.

# மோட்டார் ஊர்திப் பதிவுகளை மேற்கொள்ள விசேட ஒழுங்கு!

வட்டக்கச்சி

தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரால் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுகளை இதுவரை மேற்கொள்ளாது, தற்போது பயன்பாட்டில் உள்ள மற்றும் பயன்பாடற்ற ஊர்திகளுக்கான பதிவுகளை மேற்கொள்வதற்கான விசேட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் நாளை புளியங்குளத்திலும், மறுநாள் புதன்கிழமை கனகராயன் குளத்திலும், 22 ஆம் திகதி வியாழக்கிழமை மாங்குளத்திலும், 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பாண்டியன் குளத்திலும் அந்தந்தப் பகுதிப் போக்குவரத்துக் கண்காணிப்புக் குழு பிரதேச செயலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஊர்திகளுக்கான பதிவுகளை மேற்கொள்ள வரும் ஊர்திகளின் உரிமையாளர்கள் - ஊர்திகளுக்கான ஊர்தி ஆவணங்களின் நிழல் பிரதி, ஆயப் பகுதித் தீர்வைச் சான்றிதழின் நிழல் பிரதி, பழைய கடவுச்சீட்டு அளவுடைய கறுப்பு வெள்ளைப் புகைப்படம் இரண்டு, பிணையாளி குடும்ப அட்டையுடன், குடும்ப அட்டையின் நிழல் பிரதியுடன் நேரில் சமூகமளித்தல் வேண்டும்.

அதேபோன்று ஊர்தியின் பதிவை மேற்கொள்ள வருபவரும் குடும்ப அட்டையுடனும், குடும்ப அட்டை நிழல் பிரதியுடனும் சமூகமளிக்க வேண்டுமென தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (09)

# மேஜர் துளசி பயிற்சிப் பாசறையில் 4ஆவது அணியின் பயிற்சி நிறைவு

கிளிநொச்சி

மேஜர் துளசி பயிற்சிப் பாசறையில் மக்கள் படைக் கட்டுமானப் பயிற்சியின் நான்காவது அணிக்கான பயிற்சி நிறைவு விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30 மணியவில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடர் மற்றும் திருவுருவப்படத்துக்கான சுடரை பயிற்சி ஆசிரியர் செல்வா, தமிழீழ தேசியக் கொடியை அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் ஏற்றிவைத்தனர். சிறப்புரையை சோ.தங்கன் நிகழத்தினார்.

தொடர்ந்து, பயிற்சிபெற்ற வீரர்களுக்கான பயிற்சி அட்டைகளை சோ.தங்கன், மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவநாத், போராளி பசுபதிப்பிள்ளை ஆகியோர் வழங்கினர்.

இதன்பின்னர் பயிற்சி பெற்ற வீரர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பயிற்சி நிறைவு நிகழ்வில் 300 இற்கும் மேற்பட்டவர்கள் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறியுள்ளனர்.

# மாதர் அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம் இன்று!

வட்டக்கச்சி

கிளிநொச்சி - கனகபுரம் மாதர் அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் இன்று கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கனகபுரம் மாதர் சங்கத் தலைவி பே.கலா தலைமையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் பொதுக்கூட்டத்துக்கு - கனகபுரம் வாழ் மாதர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாதர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (09)

# விளையாட்டு நிகழ்வுகள்!

கிளிநொச்சி

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு கைவேலியிலுள்ள வீரவேங்கை நிஷாந்தன் பயிற்சிப் பாசறை 01 இல் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறிய பயிற்சியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பயிற்சி ஆசிரியர் குயிலன் தலைமையில் முற்பகல் 10 மணியளவில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த விளையாட்டு நிகழ்வு நிறைவில் வெற்றிபெற்ற பயிற்சியாளர்களுக்கான பரிசில்களை பயிற்சி ஆசிரியர் குயிலன், பைங்கதிர், ஆதிரை மற்றும் போராளிகளான சிறிவாணி, ஈழமகள் ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். (கு)

# விடுதியில் திருடப்பட்ட பொருட்கள் கிளிநொச்சி காவல்துறையால் மீட்பு

கிளிநொச்சி

விடுதியில் தங்கியிருந்த ஒருவரிடமிருந்து களவாடப்பட்ட பணமும், பொருட்களும் உரியவரின் முறைப்பாட்டைத் தொடர்ந்து கிளிநொச்சிக் காவல் பணிமனையினரின் துரித நடவடிக்கையின் மூலம் மீட்கப்பட்டது.

கிளிநொச்சி தங்குவிடுதி ஒன்றிலிருந்து தனது வியாபார நடவடிக்கையை மேற்கொண்டு வந்த வியாபாரி ஒருவர் கடந்த 7ஆம் திகதி வியாபார நடவடிக்கையின் பின் இரவு 9.45 மணியளவில் விடுதிக்குச் சென்று பார்த்தபோது தனது அறையில் வைத்து விட்டுச் சென்ற பொருட்களும், பணமும் திருட்டுப் போயுள்ளதைக் கண்டு உடனடியாகச் சென்று கிளிநொச்சி காவல் பணிமனையில் முறைப்பாடு செய்தார்.

இதனைத் தொடர்ந்து துரித நடவடிக்கையில் இறங்கிய கிளிநொச்சி காவல்துறையினர் மறுநாள் அதிகாலை 4.30 மணிக்குப் பரந்தன் முரசுமோட்டையில் வைத்து சம்பந்தப்பட்ட சந்தேக நபரைக் கைது செய்ததுடன், களவாடப்பட்ட 75 ஆயிரம் ரூபா பணத்தையும், மூன்று லட்சத்து முப்பத்தோராயிரத்து இருநூறு ரூபா பெறுமதியான பொருட்களையும் மீட்டனர்.

இந்தச் சந்தேக நபர் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, நீதிமன்றத்தால் இன்று வரை தடுத்து விசாரணை மேற்கொள்ளுமாறு காவல் துறையினருக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டது. (09)

# சனசமூக நிலைய நிர்வாகிகள் தெரிவு

கிளிநொச்சி

கிளிநொச்சி - கனகபுரம் சிறிகாந்தா சனசமூக நிலைய நடப்பு வருட நிர்வாகிகள் தெரிவு நேற்று முன்தினம் கனகபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட உதவி ஆணையாளர் காரியாலயத்தைச் சேர்ந்த மகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிர்வாகிகள் தெரிவில் - தலைவர் மா.சோதிநாதன், உப தலைவர் எஸ்.சதீஸ், செயலாளர் மு.சிவநாதன், உப செயலாளர் பொன். பஞ்சாட்சரம், பொருளாளர் சு. சிவதாசன் ஆகியோருடன் 6 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபைச் செயலாளர் வெ.குலேந்திரன், கனகபுரம் கிராம சேவை அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (09)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

அழிவின்று அறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

- திருக்குறள்.

## நமது நோக்கு

# விடுதலைக்கு வேண்டும் ஒற்றுமை

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக தமிழகத்தில் பேரெழுச்சியுடன் 14 இடங்களில் கடந்த வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணிகள் இடம்பெற்றிருந்தன.

இந்த ஆர்ப்பாட்டங்களில் தமிழ்த் தேசியக் கட்சிகளும், அமைப்புகளும் ஈடுபட்டிருந்ததாக அறிய முடிகிறது. தமிழ்மக்கள் மீது இடம்பெறும் அடக்குமுறைகள் குறித்து அறிந்துகொள்ள இலங்கைக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்றை அனுப்ப வேண்டும் என்பது இந்த ஆர்ப்பாட்டங்களின் முக்கிய குறிக்கோளாகும்.

வைகோ, திருமாவளவன், நெடுமாறன் என்று முக்கிய தலைவர்கள் கலந்துகொண்ட இந்த ஆர்ப்பாட்டங்களிலிருந்து பா.ம.க. திடீரென விலகிக்கொண்டது பலருக்கும் அதிர்ச்சியையும், ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஈழத் தமிழர் போராட்டம் குறித்து நெடுங்காலமாகவே பகிரங்க ஆதரவு தெரிவித்து வரும் பா.ம.க. - ஏன் திடீரென இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்காமல் ஒதுங்கியது என்று பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

ஆனால், நிச்சயமாக இந்தப் போராட்டம் நியாயமற்றதெனக் கருதியோ- ஈழத் தமிழர் ஆதரவு நிலைப்பாட்டிலிருந்து விலகிக் கொண்டதாலோ பா.ம.க. இந்த முடிவை அறிவிக்கவில்லை என்பது மட்டும் உண்மை.

ஆனால், தமிழக அரசியலில் எதிரும் புதிருமாக நிற்கும் அ.தி.மு.க. அணியிலுள்ள வைகோ, திருமாவளவன் போன்றோருடன் இணைந்து போராட்டத்தில் ராமதாஸ் பங்கேற்பது தி.மு.கவுக்கு நெருடலை ஏற்படுத்தியிருக்கலாம்.

சில சமயங்களில் பகிரங்கமாகவோ, மறைமுறைமாகவோ கொடுக்கப்பட்ட அழுத்தத்தின் பேரில் பா.ம.க. இந்த முடிவை எடுத்ததோ தெரியவில்லை.

ஆனால், தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் எதிரெதிர் அரசியல் நடத்துவது ஒன்றும் தப்பில்லை. ஆனால், ஒன்றுபட்ட தமிழினம் என்ற கொள்கைக்கு முன்பாக இப்படிப்பட்ட சின்னத்தனமான அரசியல் நடத்துவது முறையற்றது.

ஏனெனில், தமிழினம் எழுச்சி கொண்டு வரலாறு படைப்பதை சகிக்க முடியாத சக்திகள் இலங்கைத்தீவில் மட்டுமன்றி இந்தியாவில் கூட இருக்கின்றன. இத்தகைய சக்திகள் தமிழினத்தைப் பலவீனப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு தமிழகக் கட்சிகள் துணைபோகக் கூடாது.

பா.ம.க. திடீரென ஈழத் தமிழர்ஆதரவுப் போராட்டத்திலிருந்து விலகிக்கொண்டதால் போராட்டம் பலவீனப்பட்டுவிட்டதான உணர்வையே பலருக்கும் ஏற்படுத்தியது.

ஈழத் தமிழர் மீதான அக்கறையை வெளிப்படுத்தப் புறப்பட்டபோது - அரசியல் பேதத்தை மறந்துவிட வேண்டியது தமிழகக் கட்சிகள் கையாள வேண்டிய முக்கிய கடமையாகும்.

ஏனென்றால், ஈழத் தமிழரைப் பலவீனப்படுத்தி அழிக்க முற்படும் சக்திகளுக்கு இப்படிப்பட்ட குழப்ப நிலை பெரும் பலத்தையோ, ஊக்கத்தையோ கொடுத்துவிடும்.

ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டம் உச்சக் கட்டத்தை நெருங்கியுள்ள தருணத்தில், தமிழக மக்களும், தமிழக அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டு தமது ஆதரவைக் கொடுக்க வேண்டியது ஒவ்வொருவரதும் தார்மீகக் கடமையாகும்.

இதன் மூலம் தான் ஈழத்தமிழர்களின் விடுதலைக்கு தமிழகம் உச்சக்கட்ட உதவி செய்ததாக அமையும்.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்



## புலிகளுக்கு ஹெலி வழங்கிய விவகாரம்

# சமாதான செயலகத்துடன் பாதுகாப்பு அமைச்சு மோதல்

கொழும்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒஸ்லோ குழுவினருக்கு ஹெலிவசதி ஏற்பாடு செய்தமை தொடர்பாக அரச சமாதான செயலகத்துக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையே மோதல் நடைபெற்றதாக கொழும்பு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

சுவிஸ்,சூரிச்சிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் 6 பேர் கொண்ட குழு புறப்படுவதற்கு முன்பாக பாதுகாப்பு அமைச்சின் சார்பில் நோர்வே தரப்பினருக்கு ஒரு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து வவுனியா,ஓமந்தை வரைக்கும்தான் ஹெலி வசதி செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. ஓமந்தையிலிருந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தங்களது சொந்த பயண ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்று மறைமுகமாக கூறப்பட்டிருந்தது.

வழமையாக விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுக்களுக்கு சென்று திரும்பும் போது கிளிநொச்சி வரை ஹெலிவசதி செய்யப்படும். ஆனால் ஒஸ்லோ பேச்சுக்கள் தோல்வியடைந்த நிலையில் அரசாங்கம் இந்த முடிவை மேற் கொண்டது.

பாதுகாப்பு அமைச்சின் கடிதத்தைப் பெற்றுக் கொண்ட நோர்வே தரப்பினர் அரச சமாதான செயலகப் பணிப்பாளர் பாலித கொகன்னவைத் தொடர்பு கொண்டு அரசாங்கத்தின் முடிவை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டனர்.

இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் விமானம் டுபாயை வந்தடைந்துவிட்டது.

பதற்றமடைந்த நோர்வேக் குழுவினர்,விடுதலைப் புலிகளை கிளிநொச்சியில் இறக்கி விடாவிட்டால் அவர்கள் திரும்பவும் நோர்வேக்கே சென்று விடுவர் என்று கூறியிருந்தனர்.

நோர்வேயில் இருந்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவுக்கு இது தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை தொடர்பு கொண்டு பாலித கொகன்ன நிலைமைகளை விபரித்தார். அதன் பின்னர் செய்மதி தொலைபேசியூடாக இந்தத் தகவலும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஜூன் 14 ஆம் திகதி புதன்கிழமை விடுதலைப் புலிகளின் குழுவினர் கொழும்பு வந்தடைந்தனர்

முன்னரைப் போல் இல்லாமல் சுவீடனைச் சேர்ந்த கண்காணிப்புக் குழு உறுப்பினரும் கிளிநொச்சி சென்றார். அவரது வருகையை விடுதலைப் புலிகள் ஆட்சேபிக்கவில்லை.

ஏனெனில் ஐரோப்பியத் தடையைத் தொடர்ந்து சுவீடன் கண்காணிப்புக் குழுவில் இடம் பெறக் கூடாது என்று புலிகள் கூறியிருந்தனர் என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டென்மார்க் அமைதிச்சபை கண்டனம்

கொழும்பு

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை அநாகரிகமானது என டென்மார்க் நாட்டின் அமைதிச்சபை கண்டனம் தெரிவித்துள்ளது.

மென்மார்க் அமைதிச்சபையின் பிரதித்தலைவர் லெவி.கே. ப்ரவுச் இது குறித்து கூறியதாவது-

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையானது - அமைதியை உருவாக்காது. அமைதியின் பக்கத்தைத் தவிர எந்தப் பக்கச்சார்பு நிலையையும் நாம் மேற்கொள்ளமாட்டோம்.

இந்தப் பிரச்சினையில் தொடர்புடைய இருதரப்பினருமே வன்முறையைக் கையாள்கின்றனர். அனைத்து வகையிலான வன்முறைகளையும் நாம் கடுமையாக எதிர்க்கிறோம்.

இரு தரப்பினரையும் ஒரே பாதையில்தான் சர்வதேச சமூகம் அணுகவேண்டும். வன்முறையை யார் உருவாக்குகிறார்கள் என்பது குறித்து உரிய விசாரணை நடத்தி அதற்கு முழுப்பொறுப்பான நபர்களை அடையாளப்படுத்த வேண்டியது அவசியமானது.

தமிழீழ விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்பாக முத்திரை குத்திவிட்ட பின்னர் அமைதிப்பேச்சுக்களை நடத்துவது என்பது கடினமானது. இதனால் அப்பாவி பொதுமக்கள் பாதிக்கப்படுவர்.

ஏனெனில் இலங்கையில் அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் வாழும் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் பிரதான அமைப்பாகத் தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளனர்.

நாம் நோர்வேயின் வழியைத் தான் பின்பற்றுவோம். ஐரோப்பிய ஒன்றியத்தை பின்பற்றமாட்டோம். நோர்ட்டிக் அமைதிக் குழுவின் அங்கமாகவே நாங்கள் உள்ளோம்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடைவிதிக்கும் முடிவுகளுக்கு அப்பால் அமைதிக்கான ஆதரவைத் தரவேண்டும். ஐரோப்பிய ஒன்றியத் தடையை அநாகரிகமானதாகவே நாம் பார்க்கிறோம்.

அமைதியை உருவாக்குவதில் ஸ்கண்டிநேவிய நாடுகள் நடுநிலைமையுடன் செயற்பட வேண்டியதை உலகுக்குக் காட்ட வேண்டிய சூழ்நிலை இப்போது உள்ளது எனத் தெரிவித்தார்.

# இலங்கைக்கான உதவிகளை ஜப்பான் இடைநிறுத்தும்?

கொழும்பு

இலங்கைக்கான அபிவிருத்தி உதவிகளை நிறுத்துவது தொடர்பாக ஜப்பான் பரிசீலித்து வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இலங்கையில் வன்முறைகள் அதிகரித்து ஒரு முழு அளவிலான யுத்தம் தொடங்கும் நிலை இருப்பதால், தனது உதவிகளை நிறுத்த ஜப்பான் முடிவு செய்திருப்பதாக கொழும்பில் உள்ள ஜப்பான் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது தொடர்பாக உத்தியோகபூர்வமற்ற முறையில் அரசாங்கத்துக்கு ஜப்பான் தெரிவித்திருப்பதாகவும், ஜப்பான் தனது உதவிகளை நிறுத்தினால், ஐக்கிய நாடுகள் சபை உதவியும் நிறுத்தப்படக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

தமிழ் மக்களின் சட்டபூர்வமான உரிமைகளை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று ரோக்கியோ இணைத்தலைமை நாடுகள் வலியுறுத்தியிருந்தன. ஆனால், அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை.

மேலும், துணை இராணுவக்குழுவினருக்கும், அரச படைகளுக்கும் தொடர்பில்லை என்று அரசாங்கம் கூறுவதை ஜப்பான் நம்ப மறுத்துவிட்டது.

இந்த நிலையில் வன்முறைகளும் அதிகரித்து யுத்தம் தொடங்கக்கூடிய சூழலில் அபிவிருத்திக்கான உதவிகளை நிறுத்த ஜப்பான் பரிசீலிப்பதாக ஜப்பான் தூதரக வட்டாரச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பில் உள்ள சுவீடன் தூதுவரும் கடந்த வாரம்- அமைதி முயற்சிகளை உண்மையான ஈடுபாட்டுடன் அரசாங்கம் முன்னெடுக்காத வரை அனைத்து அபிவிருத்திப் பணிகளுக்குமான உதவிகள் இடைநிறுத்தப்படும் என்று பகிரங்கமாக எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப் புலிகள் மீதான தடையை மீள் பரிசீலனை செய்ய வேண்டும்



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா-கஜேந்திரன் தற்போதைய நிலைமையை விளக்கி வெளியிட்ட பத்திரிகை அறிக்கை இது**

இலங்கை சுதந்திரமடைந்த காலப்பகுதியில் இருந்து மாறி மாறி ஆட்சிப்பீடமேறிய சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கெதிராக கட்டவிழ்த்து விட்ட திட்டமிட்ட நிலப்பறிப்புகள், நீதிக்குப் புறம்பான கைதுகள், சித்திர வதைகள்,பாலியல் வல்லுறவுகள், படுகொலைகள் போன்றவற்றுக்கெதிராக 1970 ஆம் ஆண்டுகள் வரையான மூன்று தசாப்த காலமாகத் தமிழ் தலைவர்கள் ஜனநாயக ரீதியாக வன்முறைகளற்ற வழியில் போராடினார்கள்.

அகிம்சைவழிப் போராட்டங்கள் மீது சிங்கள ஆட்சியாளர்களால் கொடூர அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டதால், 70ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப் போராட்டம் - கடந்த 2001 ஆம் ஆண்டு சித்திரையில் ஆயுதப் படைகளை இராணுவ ரீதியாக தோற்கடிக்கும் வரை தொடர்ச்சியாக நடைபெற்றது.

அதுவரையான காலப்பகுதியில் எமது மக்கள் மீதும், வாழ்விடங்கள் மீதும்,குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு, அவர்களது வாழ்விடங்களில் இருந்து லட்சக் கணக்கானவர்கள் வெளியேற்றப்பட்டு,அவர்களது வீடுகள், வணக்கஸ்தலங்கள்,கல்விக் கூடங்கள்,தொழில் நிலையங்கள்,விவசாய நிலங்கள் என்பன ஆக்கிரமிக்கப்பட்டு மக்கள் அகதிகளாக்கப்பட்டபோது ஐரோப்பிய ஒன்றியம் மௌனமாகவே இருந்து வேடிக்கை பார்த்தது.

இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியான வெற்றி மற்றும் அரசின் இராணுவ ரீதியான தோல்வியின் விளைவாக சமாதான உடன்படிக்கை உருவாக்கப்பட்டது.

22 மாசி மாதம் 2002 ஆம் ஆண்டில் இருந்து நவம்பர் 2005 ஆம் ஆண்டு வரையான 4 வருட காலத்தில் இராணுவத்தினருக்கெதிராக எந்தவொரு தாக்குதல்களும் இடம் பெறவில்லை.ஆனால் இந்தக் காலப்பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் 70 பேரும்,போராளிகள் 127 பேரும் இலங்கை இராணுவத்தினராலும், அதன் துணை ஆயுதப்படைகளாலும் கொலை செய்யப்பட்டனர்.

இந்த நான்காண்டு காலப்பகுதியில் போர் நிறுத்த உடன்படிக்கையை மதித்து அரசு அதனை நடைமுறைப்படுத்தத் தவறிய போது , மாணவர்களை சுதந்திரமாகக் கல்வி கற்கவோ, இடம் பெயர்ந்த மக்களை மீளக்குடியமரவோ, தமது நிலத்தில் விவசாயம் செய்யவோ அல்லது கைத்தொழில்களை ஆரம்பிக்கவோ அனுமதிக்காது -மீனவர்களை சுதந்திரமாக மீன் பிடிக்க அனுமதிக்காது, அவர்கள் மீது இராணுவ நெருக்குவாரங்களை கட்டவிழ்த்து விட்டபோது சிரான் அமைப்பை நடைமுறைப்படுத்த அரசு தவறியபோது, ISGA அடிப்படையில் பேச அரசு மறுத்த போது,சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க உருவாக்கப்பட்ட கட்டமைப்பை (P-TOMS) நடைமுறைப்படுத்த அரசு தவறிய போது -

இவற்றுக்கெதிராக போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அல்லது ஐரோப்பிய ஒன்றியம் ஏதாவது நடவடிக்கை எடுத்து நிலைமையை சுமுகமாகவும்,தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தவும் முயன்றதா?

இந்த நிலையில் விரக்தியடைந்த, துணிச்சலுள்ள ஓர் இளைஞர் கூட்டம் டிசெம்பர் 2005 ஆம் ஆண்டில் இருந்து படையினருக் கெதிராக தாக்குதல்களை ஆரம்பித்தார்கள். அவ்வாறு தாக்குதல்கள் நடைபெற்ற போது, இராணுவம் பதில் தாக்குதல் என்ற போர்வையில் இராணுவத்தினருக்கெதிரான தாக்குதல்கள் எதிலும் ஈடுபடாத அப்பாவித் தமிழ் மக்கள் பழிவாங்கப்பட்டார்கள்.

அப்பாவித் தமிழ் மக்கள் காட்டுமிராண்டித்தனமாக அடித்து சித்திரவதை செய்யப்பட்டார்கள்,அடித்தும்,சுட்டும், காயப்படுத்தப்பட்டார்கள், வெட்டியும்,சுட்டும்,கொலை செய்யப்பட்டார்கள்,கடத்திச் செல்லப்பட்டார்கள்.

திருகோணமலையில் 5 மாணவர்கள் விசேட அதிரடிப்படையினரால் படுகொலை செய்யப்பட்டபின்,

26.12.2006 இல் அதிகாலை 1 மணியளவில் மட்டக்களப்பில்,தேவாலயத்தில் வைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் படுகொலை செய்யப்பட்ட பின்,

பேசாலையில் கடற்படையினரால் தமிழ் மக்களது வீடுகள் எரிக்கப்பட்டு,மக்கள் கொலை செய்யப்பட்ட பின்,

புங்குடுதீவில் கடற்படையினரால் தர்சினி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பின்,

மானிப்பாயில் போஜனது குடும்பத்தினர் மீது இராணுவப் புலனாய்வுப் பிரிவினரும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து குண்டு வீசி மூவரைக் கொன்று இருவரைக் காயப்படுத்திய பின், புத்தூரில் ஐந்து இளைஞர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பின்,

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மறைந்த தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கத்தின் இடத்துக்கு நியமிக்கப்படவிருந்த வி.விக்னேஸ்வரன் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் திருகோணமலையில் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் வைத்து படுகொலை செய்யப்பட்ட பின்,

திருகோணமலையில் கடற்படையினர் முன்னிலையில் 20 தமிழர்கள் சிங்கள காடையர்களால் படுகொலை செய்யப்பட்டு,31 தமிழர்களது வர்த்தக நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்ட பின், திருகோணமலை மூதூரில் எமது மக்கள் மீதும், வாழ்விடங்கள் மீதும்,வான்,கடல், தரை வழியாகக் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு, 14 பேர் படுகொலை செய்யப்பட்டு, எஞ்சியோர் அவர்களது வாழ்விடங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்,

04.05.2006 அன்று நெல்லியடியில் 7 இளைஞர்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்ட பின்,

வரணி மந்துவிலில் 8 இளைஞர்கள் படையினரால் கடத்தப்பட்ட பின் ,

அல்லைப்பிட்டியில் கடற்படையினரும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து ஒரே இரவில் எட்டுப்பேரை படுகொலை செய்த பின்,

02.05.2006 அன்று இரவு 7 மணியளவில் யாழ்ப்பாணத்திலுள்ள உதயன் பத்திரிகை அலுவலகத்தினுள் புகுந்த ஈ.பி.டி.பியினர் அங்கிருந்த இரு ஊழியர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு, இரு ஊழியர்களை சுட்டுக் காயப்படுத்திவிட்டு தப்பிச் சென்றனர். இதில் ஈடுபட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவரது பெயரும், அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் இலக்கமும் பொலிஸாரிடம் அந்த நிறுவனத்தினரால் ஒப்படைக்கப்பட்ட பின்,

12.05.2006 அன்று இரவு 11.30 மணிளவில் யாழ்ப்பாணத்திலுள்ள எனது நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகமும், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமை அலுவலகமும் அமைந்துள்ள கட்டடத்தினுள் நுழைந்த இராணுவத்தினரும், ஈ.பி.டி.பியினரும் இணைந்து அங்கிருந்த இரு அலுவலகங்களுக்கும் சொந்தமான சொத்துக்களை கொள்ளையடித்த பின்னர்,எஞ்சியவற்றை தீயிட்டு எரித்து அழித்தனர்.இந்தச் சம்பவத்தில் இராணுவத்தினரும்,ஈ.பி.டி.பியினரும் இணைந்து ஈடுபட்டார்கள் என்பதனை நேரில் கண்டவர்கள் நீதிமன்றத்தில் சாட்சியமளித்த பின்,

இந்தக் கொலைகளில், வன்முறைகளில் ஈடுபட்ட குற்றவாளிகள் யாராவது கைது செய்யப்பட்டார்களா? சட்டத்தால் தண்டிக்கப்பட்டார்களா?அதற்காக அரசு என்ன நடவடிக்கை எடுத்தது?

இப்படிப் பல சம்பவங்களில் ஈ.பி.டி.பி அமைப்பு நேரடியாகவும், மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டிருந்தது.அந்த அமைப்பானது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையிலான அரசில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் டக்ளஸ் தலைமையில் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்ற 18.11.2005 இல் இருந்து மே 2006 வரையான 7 மாத காலத்தில் 300 இற்கும் மேற்பட்ட தமிழ் மக்களும், 23 போராளிகளும் படுகொலை செய்யப்பட்டனர். இதில் 14 வயதுக்குட்பட்ட 22 சிறுவர்களும் அடங்குவர். குறிப்பாக 24 ஆம் திகதி பெப்ரவரி மாதம் ஜெனிவாவில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற பின்னர் 26 மே மாதம் 2006 வரை 207 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இவ்வளவு படுகொலைகளும், ஆத்திரமூட்டும் சம்பவங்களும் நடைபெற்ற பொழுதிலும் கூட, விடுதலைப் புலிகள் பொறுமை காத்து வருகின்ற நிலையில் - இந்தப் படுகொலைகள், ஆத்திரமூட்டும் சம்பவங்களில், போர் நிறுத்த மீறல்களில் அரச தரப்பு ஈடுபட்டுள்ளபோதிலும், இதனைக் கட்டுப்படுத்த அரசுக்கெதிராக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அல்லது ஐரோப்பிய ஒன்றியம் என்ன நடவடிக்கை எடுத்தது?

தமிழ் மக்கள் இலங்கையினுடைய அரசியல் அமைப்பின் மீதும், சட்டம் மற்றும் நீதித்துறை மீதும் முற்றாக நம்பிக்கை இழந்தமையாலேயே அவற்றை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு போர் நிறுத்த உடன்படிக்கை உருவாக்கப்பட்டது. அது நடைமுறையில் இருந்த போது அதனை முற்றாக செயலிழக்கச் செய்யும் வகையில் அரசு அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியதிலிருந்து அது போர் நிறுத்த உடன்படிக்கையை பாதித்து வந்த போதும், அரசுக்கு அழுத்தம் கொடுத்து அவசரகாலச் சட்டத்தை நீக்கவும், போர் நிறுத்த உடன் படிக்கையை பாதுகாக்கவும் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு அல்லது ஐரோப்பிய ஒன்றியம் ஏதாவது நடவடிக்கை எடுத்தனவா?

அமைதியாக இருந்து நீண்ட காலமாக அரசு தமது ஆளுமையை இழந்து போயிருந்த வடக்கு - கிழக்கின் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் சிவில் நிர்வாகத்தை நடை முறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்கியே வந்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காதிருந்து விட்டு, புறம்பான வகையில் ஐரோப்பி ஒன்றியம் புலிகளை தடை செய்துள்ளமையானது - அரச பயங்கரவாதத்துக்கு ஆதரவளிக்கும் செயற்பாடாகும்.

வன்முறைகளை கைவிட்டு ஜனநாயக வழிமுறையில் உரிமைகளைப் பெற முயல வேண்டும் என வற்புறுத்தி வரும் ஐரோப்பிய ஒன்றியம், கடந்த நான்கு வருடங்களில் பல லட்சம் தமிழ் மக்கள் தமிழர் தாயகத்திலும், வெளிநாடுகளிலும் ஒன்று கூடி 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் மூலம் உரிமைக் கோரிக்கைகளை வெளிப்படுத்தினார்கள்.

05.12.2001,04.04.2004 ஆகிய திகதிகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல்களினூடாகவும் தமிழ் மக்கள் உரிமைக் கோரிக்கைகளை வெளிப்படுத்தினார்கள்.

ஒவ்வொரு சந்தரப்பங்களிலும் தமிழ் மக்கள் பின்வரும் முக்கிய விடயங்களையும் வலியுறுத்தினார்கள்.

- *தமிழீழ விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள்.*
- *தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மட்டும் தான் பேச வேண்டும்.*
- *போர் நிறுத்த உடன்படிக்கையை அரசு முழுமையாக நடைமுறைப் படுத்த வேண்டும்.*
- *ISGA அடிப்படையில் பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும்.*
- *ISGA தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்கப்பட வேண்டும்.*
- *தமிழர் தாயகத்தி லிருந்து சிங்கள ஆக் கிரமிப்புப் படைகள் வெளியேற வேண்டும்.*

அவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேசத்தின் மீதும்,ஜனநாயகத்தின் மீதும் அதீத நம்பிக்கை கொண்டு ஜனநாயக வழியில், மீண்டும் வன்முறையில்லாமல்,யுத்தம் இல்லாமல்,இரத்தம் சிந்தாமல் உரிமைகளைப் பெற வேண்டும் என்பதற்காக மக்கள் மத்தியில் நின்று செயற்பட்ட கல்விமான்கள்,ஊடகவியலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள்,சமூகத் தலைவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட பின்னர் ஜனநாயக வழிமுறைமீது தமிழர்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த ஐரோப்பிய ஒன்றியம் என்ன நடவடிக்கை எடுத்தது?

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேசத்தின் மீதும், ஜனநாயகத்தின் மீதும் அதீத நம்பிக்கை கொண்டிருந்த தமிழ் மக்களை ஏன் ஐரோப்பிய ஒன்றியம் ஏமாற்றியது?

இவ்வாறு தடை செய்துள்ளமையானது, தமிழர் தரப்பு நியாயப்பாடுகளை புரிந்து கொண்டு, தமிழர் மீதான அரச பயங்கரவாதத்தையும், இன ஒதுக்கல் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும், தமிழரின் நியாயமான அரசியல் உரிமைகளை பெற்றுக் கொள்ளவும் ஐரோப்பிய ஒன்றியம் பக்கச்சார்பின்றி, நடுநிலையோடு, செயற்படும் என்ற தமிழ் மக்களின் நம்பிக்கையை சிதறடித்துள்ளதுடன், பெரும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும், ஆத்திரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

புலிகள் மீதான தடை தொடர்பாக அண்மையில் கருத்து வெளியிட்ட இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி கூறியதாவது -

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையானது தமிழ் மக்களுக்கோ, முஸ்லிம் மக்களுக்கோ எதிரானதல்ல. மாறாக அது தமிழீழ விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கெதிரானது இவ்வாறு கூறுவதன் மூலம்

**புலிகள் வேறு தமிழ் மக்கள் வேறு என்றும் புலிகளின் விருப்பங்கள் வேறு தமிழ் மக்களின் விருப்பங்கள் வேறு**

என்றும் கூறி புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கவும், வடக்கு - கிழக்கை தனித்தனியாக பிரிக்கவும் முயலும் அரசின் சதி நடவடிக்கைகளுக்கு துணைபோவதாக அமைந்துள்ளதால், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்தக் கூற்றை மிகவன்மையாகக் கண்டிக்கின்றோம்.

தடையானது அரசும், புலிகளும் சமம் என்ற பேச்சுவார்த்தைக்கான அடிப்படையை தகர்த்துள்ளதுடன், சமாதானத்துக்கெதிரான சக்திகளை ஒன்று திரட்டவும், பலப்படுத்தவும் வழிவகுத்துள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையையும், ஜெனிவா உடன்படிக்கையையும் அரசு ஒரு போதும் நடைமுறைப்படுத்த தேவையில்லை என்ற நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியம் வல்லரசு நாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணிந்து புலிகளை தடை செய்ததா?

கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கவில்லை என்பதற்கான பழிவாங்கும் நடவடிக்கையா?

அரசு - பயங்கரவாதம் புரியலாம் ஆனால் அதற்கு எதிராக யாரும் செயற்படக்கூடாது என்று ஐரோப்பிய ஒன்றியம் கருதுகின்றதா?

தங்களது பிராந்திய அரசியல், பொருளாதார நலன்களுக்காக இலங்கை அரசுடன் இணைந்து புலிகளை தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கவும், புலிகளை பலவீனப்படுத்தி, பணியவைத்து, சிங்கள அரசு விரும்புவது போன்ற தொரு அரைகுறைத் தீர்வைத் தமிழர் மீது திணிக்கவும் ஐரோப்பிய ஒன்றியம் முயல்கின்றதா?

சமாதான வழிமுறையினூடாக புலிகள் பலவீனப்படுவார்கள் இல்லையேல் இவ்வாறான தடைகளைப் போட்டு புலிகளைப் பலவீனப்படுத்தி, பணியவைக்கலாம் என்ற திட்டத்தோடு தான் போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தினத்திலிருந்து ஐரோப்பிய ஒன்றியம் செயற்பட்டதா?

அதனால் தான் அரசு போர்நிறுத்த உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தாமல், போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி வன்முறைகள், கொலைகளில் ஈடுபட்டபோது அதனைத்தடுத்து நிறுத்தி, ஒப்பந்தத்தை அமுல் படுத்தச் செய்ய, இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக் குழு அல்லது ஐரோப்பிய ஒன்றியம் எவ்வித நடவடிக்கையையும் எடுக்காமல் மௌனம் காத்ததா?

கடந்த 08.06.2006 நோர்வேயில் நடைபெறவிருந்த கூட்டத்துக்கு நோர்வேயின் அழைப்புக்கு மதிப்பளித்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரமுள்ள உயர்மட்டக்குழு அங்கு சென்றது. எனினும் அரச தரப்பு பொறுப்பற்ற விதமாக அதிகாரமற்ற கீழ்மட்டக் குழு ஒன்றை நோர்வேக்கு அனுப்பியதன் விளைவாகக் கூட்டம் குழம்பிப்போனது.

எனினும் புலிகளின் சமாதான செயலகப் பணிப்பாளர் சி.புலித்தேவன் தலைமையிலான குழுவினரை பேச்சுக்கு அனுப்பப் புலிகள் சம்மதித்துள்ளபோதிலும் கூட, அரச தரப்பு அதனைக் குழப்பியடித்துக் கொண்டு வெளியேறியதன் மூலம் குழப்ப நிலையை உருவாக்கியுள்ளனர்.

இந்தவிடயத்தில் நோர்வேத்தரப்பு நடந்து கொண்டவிதம் தமிழ் மக்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நிகழ்ச்சி நிரலில் அரசுடன் பேசுவது தொடர்பாக முன்கூட்டியே எதனையும் குறிப்பிடாமல் இருந்துவிட்டு திடீரென அரச தரப்போடு பேசவைக்க ஏன் முயன்றார்கள்?

அவ்வாறு பேசவைக்க வேண்டிய தேவை இருந்திருந்தால் ஏன் அது விடுதலைப்புலிகளுக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லை?

பேசவைக்க வேண்டிய தேவை இருந்திருந்தால் தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரமுள்ள உயர் மட்டக் குழுவைப் போன்றதொரு குழுவை அரசுத்தரப்பிலிருந்து வரவழைக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரமுள்ள உயர் மட்டக்குழுவை, அரச தரப்பின் அதிகார மற்ற கீழ்மட்டக்குழுவிடம் சந்திக்க வைப்பதன் மூலம் புலிகளின் சம அந்தஸ்தைப் பாதிக்கச் செய்ய முயன்றார்களா?

இவ்வாறான சூழ்நிலையில் சந்திப்புக்கு புலிகள் மறுத்தால் புலிகள்தான் சமாதான முயற்சிகளை குழப்ப முயல்கிறார்கள் என்ற தவறான அபிப்பிராயத்தை சர்வதேசத்தின் மத்தியில் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டுச் செயற்பட்டார்களா?

அதன் மூலம் ஐரோப்பி ஒன்றியம் புலிகளை தடைசெய்ததை நியாயப்படுத்த நோர்வே தரப்பு முயன்றதா?

இவ்வாறான அணுகுமுறைகள் அமைதி வழியினூடாக சமாதானத்தை அடைய் ஒரு போதும் உதவப்போவதில்லை.

எனவே, ஐரோப்பிய ஒன்றியம் புலிகள் மீதான தடையை மறுபரிசீலனை செய்து தடையை நீக்கவேண்டும் எனக்கோருகின்றோம். அத்துடன் இலங்கைப் படைகளால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் அவமதிக்கப்படுதல், அச்சுறுத்தப்படுதல், கைது செய்யப்பட்டு சித்திர வதை செய்யப்படுதல், கடத்தப்படுதல், கொலை செய்யப்படுதல் போன்ற அரச பயங்கரவாதச் செயற்பாடுகளை தடுப்பதற்கும், போர்நிறுத்த உடன்படிக்கையையும், ஜெனிவா உடன்படிக்கையையும் அரசு உரிய முறையில் நடைமுறைப்படுத்தும் வகையிலும் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனவும் கோருகின்றோம்.

அதன் மூலம் மட்டுமே ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேசத்தின் மீதும், ஜனநாயகத்தின் மீதும், அமைதி வழிப் பேச்சுக்கள் மீதும் நம்பிக்கையிழந்துள்ள தமிழ்மக்களுக்கு மீண் டும் நம்பிக்கையை ஏற்படுத்தமுடியும்.

இல்லையேல், போர் ஒன்று வெடிப்பதையும், அதன் மூலம் எமது தாயகதேசத்தை நாம் மீட்டுக்கொள்வதையும் யாராலும் தடுக்க முடியாது.

# யாழ். குடாநாடு பகுதிகளில் சுற்றிவளைப்புத் தேடுதல்!

யாழ்ப்பாணம்—

குடாநாட்டின் பலபகுதிகளிலும் நேற்று இராணுவத்தினர் சுற்றி வளைப்புத் தேடுதலில் ஈடுபட்டனர்.


நேற்றுக் காலை கொக்குவில் மேற்குப் பகுதி படையினரால் சுற்றி வளைக்கப்பட்டதோடு,கே.கே.எஸ் வீதியூடான போக்குவரத்தில் ஈடுபட்டவர்களும் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

அத்துடன், வடமராட்சி - கொற்றாவத்தை, கரணவாய், நவிண்டில் பகுதிகளும் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு, கடுமையான தேடுதல் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது படையினரால் இளைஞர்கள் பலர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, தீவிர விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை - தென்மராட்சி - வரணியிலும் படையினர் சுற்றி வளைப்புத் தேடுதலில் ஈடுபட்டனர்.

இதன்போது பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். எனினும், இதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

## புனித யுவானியார் ஆலய வருடாந்த உற்சவம்



நெடுந்தீவு—

நெடுந்தீவு மத்தி புனித யுவானியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் கடந்த 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஒன்பது தினங்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இரவு நற்கருணை எழுந்தேற்றத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதுடன் மறுநாள் சனிக்கிழமை காலை திருநாள் திருப்பலியும், கொடியிறக்கமும், திருச்சொரூப ஆசீர்வாதமும் இடம்பெறவுள்ளன. (113)

## அதிகரித்துவரும் வெப்பம்; உவர்நீராகிவரும் நன்னீர்!

நெடுந்தீவு—

நெடுந்தீவுப் பிரதேச மக்களுக்கு குழாய் மூலம் வழங்கப்படும் குடிநீர் தற்போதுள்ள கடும் வரட்சி காரணமாக உவர் நீராகி வருகிறது.

மழைகாலத்தில் .வழங்கப்படுவது போன்று தற்போதும் குடி நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றபோதும்,தற்போதுள்ள வரட்சி நிலை காரணமாக பொதுமக்கள் தமது குடிநீர் தேவை தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்தி வருவதால் பெருமளவு குடி நீர் விரயமாக்கப்பட்டு வருகிறது.

தொடர்ந்து வரவுள்ள மாரிகாலம் வரைக்கும் தற்போதுள்ள நீரையே பயன்படுத்த வேண்டும் என்ற நிலையிலுள்ள போதும் பொதுமக்கள் இது தொடர்பாக எந்தவித அக்கறையுமின்றி அளவுக்கதிகமாக குடிநீரை பிறதேவைகளுக்கு பயன்படுத்துவதைக் குறைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (113)

## படகுச் சேவை இல்லாததால் நெடுந்தீவு மக்கள் சிரமம்!

நெடுந்தீவு—

நெடுந்தீவு மக்களின் கடற்போக்குவரத்தில் ஈடுபட்ட குமுதினிப் படகு கடந்த இரு வாரங்களுக்கு மேலாக பழுதடைந்து சேவையிலீடுபடாமையால் நெடுந்தீவு மக்கள் திறந்த படகுகளில் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

பழுதடைந்த படகுகளை திருத்தம் செய்யும் நோக்கில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நெடுந்தீவுக் கரையில் ஏற்றிவைத்துள்ளபோதும்- திருத்த வேலைகளை மேற்கொள்வதில் அசமந்தப் போக்கைக் காட்டி வருகின்றனர் என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மகிந்த சிந்தனையின் அடிப்படையில் இந்தப் படகுச் சேவை இலவசமாக்கப்பட்ட அறிவித்தல் கிடைத்த மறுதினமே படகு பழுதடைந்துள்ளது.

இந்தநிலையில் - பயணிகளின் நலன்கருதி கட்டணம் அறவிடாத அரசாங்கம், கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக ஒரேயொரு குமுதினிப் படகை சீரற்ற சேவையில் ஈடுபடுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (113)

## மின்சார விஸ்தரிப்பு பணிகள் நெடுந்தீவில் இடைநிறுத்தம்!

### பொதுமக்கள் விசனம்

நெடுந்தீவு—

கடந்த சில வாரங்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கான மின்சார விநியோக விஸ்தரிப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனால், மின்சார வசதியை எதிர்பார்த்திருந்த நெடுந்தீவு மேற்குப் பகுதிமக்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

நெடுந்தீவு மத்தியிலுள்ள மின்சார நிலையத்திலிருந்து மேற்குப் பகுதிவரைக்கும் உயர் அழுத்த மின் வழங்குவதற்கான இணைப்புகள் பூர்த்தியடைந்த நிலையிலும் - உப இணைப்புக்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும், படிநிலைமாற்றிகள் பொருத்தும் பணிகள் சுமார் 10 வீதமே உள்ள போதும், இவ்வாறான அதிகாரிகளின் அசமந்தப் போக்கு மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை, மின்சார சபையினர் இந்த வேலைகளை துரிதகதியில் செய்து முடிக்க ஆவன செய்ய வேண்டுமென அந்தப் பகுதிமக்கள் நெடுந்தீவிலுள்ள அரச அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது. (113)

## அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம்—

மீசாலை கிழக்கு ஸ்ரீ பாலையடி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி சங்காபிஷேகத்துடன் நிறைவுபெறும்.

ஆலய கிரியைகள் யாவும் கிரியா கலாமணி க.வீரபத்திரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (25)

## தர்ம ஆசிரியர் பரீட்சை

யாழ்ப்பாணம்—

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்படும் இந்து தர்மாசிரியர் பரீட்சை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்தப்பரீட்சை 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் முதன்முறையாக இந்தஇந்து தர்மாசிரியர் பரீட்சைகள் நடைபெறுகின்றன.

பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்படும் இந்தப்பரீட்சை ஐந்து வினாப் பத்திரங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது.

இந்த தர்மாசிரியர் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் யாவும் கடந்த வருடம் கோரப்பட்டு கடந்த வருடம் பரீட்சை நடைபெறவிருந்த போதிலும் தற்போழுதே இந்தப் பரீட்சை நடைபெறுவதே குறிப்பிடத்தக்கது. (25)


## போருதவிப் படைவீரர் வீரச்சாவு!

மன்னார்—

மன்னார் - முள்ளியில் இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் உதவிப்படை வீரர் ஒருவர் வீரச்சாவடைந்ததாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

பரமன்கிராய் பூநகரியை சொந்த முகவரியாகக்கொண்ட ரவிச்சந்திரன் என்று அழைக்கப்படும் சுப்பையா சீவரத்தினம் என்ற போர் உதவிப் படை வீரரே உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 17 ஆம் திகதி மன்னாரில் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்து காலசார திணைக்களத்தின் அனுசரணையுடன் மெய்கண்டார் குருபூசைதினம் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் சைவப்புலவர் செல்லத்துரை மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டோர் சைவப்பண் இசைப்பதையும் படங்களில் காணலாம். (82)



பேசாலையில் கடற்படையினரின் கிரனேட் தாக்குதலில் சேதமடைந்த வெற்றிநாயகி அன்னையின் சுருவப் பகுதி.



கடற்படையினரால் தீயிடப்பட்ட மீன்பிடிப் படகுகள்.



படுகொலைசெய்யப்பட்ட பெண்ணின் இறுதி நிகழ்வு.



வீடுகளிலிருந்து அச்சத்தால் வெளியேறும் சிறுவர்கள்.

நமது ஈழநாடு

The Leading Daily of Tamils' Homeland

# மின்சாரக் கட்டணம் ஓகஸ்ட்டில் அதிகரிப்பு

கொழும்பு—

மின்சாரசபை மறுசீரமைப்பு மற்றும் மின் கட்டண உயர்வுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை உயர்ந்துள்ள நிலையில், மின் கட்டண உயர்வு தவிர்க்க முடியாதது என்று மின்சக்தி அமைச்சர் ஜோன் செனிவிரட்ண தெரிவித்தார்.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் இந்த உயர்வு நடைமுறைக்கு வரும்.

மாதாந்தம் 30 யுனிட்டுகளுக்கு குறைவாக பயன்படுத்துவோருக்கு இந்தக் கட்டண உயர்வு பொருந்தாது. 30-90 யுனிட்கள் வரை பயன்படுத்துவோருக்கு, ஒரு யுனிட்டுக்கு 1 ரூபாவும் - 90 யுனிட்டுக்கும் அதிகமாக பயன்படுத்துவோருக்கு யுனிட் ஒன்றுக்கு 1.50 ரூபாவும் உயர்த்தப் படவுள்ளன.

கடந்த 2002 ஆம் ஆண்டு கடைசியாக மின் கட்டணம் உயர்த்தப்பட்டபோது டீசலின் விலை 15 ரூபா 40 சதமாக இருந்தது. ஆனல், தற்போது டீசலின் விலை 61 ரூபா என்றும் ஜோன் செனிவிரட்ண தெரிவித்தார்.

# தமிழகம் வரும் ஈழத்தமிழர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுங்கள்

## விஜயகாந் வேண்டுகோள்

சென்னை—


தமிழகத்துக்கு வரும் ஈழத்தமிழ் அகதிகளைப் பாதுகாப்பாக அழைத்து வருவதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் தலைவர் நடிகர் விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

அனுராதபுரம் - கெப்பிற்றிக் கொல்லாவ என்ற இடத்தில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் 65 பேர் உயிரிழந்தமை வேதனைக்குரியது.

இந்தச்சம்பவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்தநிலையில், கிளைமோர் தாக்குதலுடன் தொடர்புடையவர்களை கண்டுபிடிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், இந்தச் சம்பவம் பற்றி கவலையடையாத இலங்கை அரசு - தான்தோன்றித்தனமாக தமிழ் மக்கள் வாழும் பிரதேசங்களில் விமானத் தாக்குதல்களை நடத்தியமை எந்தவொரு அரசாங்கமும் எடுக்காத நடவடிக்கை ஆகும்.

இந்த விமானத் தாக்குதல்கள் நடத்தப்படும்போது அப்பாவி மக்களே கொல்லப்படுகின்றனர். காஷ்மீரில் எவ்வளவு வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றாலும் இந்திய அரசு விமானப் படையினரை பயன்படுத்துவதில்லை.

இலங்கையில் தமது உயிருக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தலால் அச்சமடைந்து தமிழகத்துக்கு வரும் ஈழத் தமிழ்மக்களை பாதுகாப்பாக அழைத்துவருவதற்கு இந்திய மத்திய



அரசு நடவடிக்கை எடுக்கும் என அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அவ்வாறு இல்லாதுவிடின் - தேசிய திராவிட முற்போக்குக் கழகம் ஜனநாயக் முறையில் இலங்கைத் தமிழருக்கு உதவ நடவடிக்கை எடுக்கும் எனஅவர் தெரிவித்தார்.

# யாழ்.படைகளின் தளபதியுடன் மனித உரிமை ஆணைக்குழு சந்திப்பு

யாழ்ப்பாணம்—

யாழ். மனிதஉரிமைகள்ஆணைக்குழு அலுவலக இணைப்பதிகாரி சுவேந்திரராஜா - யாழ்.படைகளின் கட் டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையிலான படை அதிகாரிகளைச் சந்தித்து மனித உரிமை நிலைமை குறித்து கலந்து ரையாடினார். பலாலி படைத்தலைமையகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு, நேற்று மாலை 3 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின்போது-

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்ட ஆலோசகர் றெமீடியஸும், இராணுவ தரப்பில் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களைக் கையாள நியமிக்கப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகள் குழுவின் தலைவர் கேணல் பெரேரோ உள்ளிட்ட அதிகாரிகளும் பங்குபற்றினர்.

இந்தச்சந்திப்பின் போது-அப்பாவிப் பொதுமக்கள் மீதான மனித உரிமை மீறல்கள், படையினரின் கைதுகள், காணாமற்போதல், தாக்குதல்கள் குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்துடன், கடற்படையினர் தொடர்புடைய மனித உரிமை மீறல்கள், குற்றச்சாட்டுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்க முடியாதிருப்பதாகவும் - இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

மேலும், இரவில் வீடுகளுக்குள் படையினர் நுழைந்து பொதுமக்களுக்கு தொல்லை கொடுப்பது, அடையாள அட்டைகளைப் பறித்து வைத்துக்கொள்வது, முகத்தை கறுப்புத் துணியால் மூடியவாறு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவது குறித்து இராணுவத் தளபதியிடம் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

மேலும், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலக இணைப்பதிகாரியாக இருந்த றோகித பிரியதர்சனவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை குறித்தும் இந்தச் சந்திப்பின் போது எடுத்து விளக்கப் பட்டது. இது தொடர்பாக யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ சந்திரசிறி பதிலளிக்கையில்-

படையினரின் மனித உரிமை மீறல்களுக்கெதிராக உரிய நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்று உறுதியளித்தார். அத்துடன், மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு படையினர் பூரண ஒத்து ழைப்பை வழங்குவர்.

கடற்படையினர் தொடர்பான விடயங்கள் குறித்து தலைமையகம் ஊடாக சந்திப்பு ஒன்றுக்கு ஒழுங்குபடுத்துவதாகவும் உறுதியளித்தார்.

மேலும், பொதுமக்களுக்கு எதிர்காலத்தில் படையினரால் தொல்லைகள் ஏற்படுத்தப்படாது என்று உறுதியளித்த யாழ்.படைகளின் தளபதி-

இப்படிப்பட்ட சம்பவங்கள் குறித்து மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் உடனடித் தகவல் தந்தால் தான் உடனடி நடவடிக்கை எடுப்பதாக வும் -

மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளுடன் தொடர்ச்சியான தொடர்பு வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், மனித உரிமைகள் விவகாரங்களுக்கான குழுவுக்கு இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றும் கேணல் பெரேரோ தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவும் இந்த சந்திப்பில் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ அரசு வெறும் கனவு! என்கிறது இலங்கை அரசு!

கொழும்பு—

தமிழீழ விடுதலைப்புலிகளின் தமிழீழ கோரிக்கையை இலங்கை அரசும், சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொள்ளாது என அரசாங்க சமாதான செயலகம் தெரிவித்துள்ளது.

ஒஸ்லோவில் அரசாங்க பிரதிநிதிகளுடன் நடைபெறவிருந்த பேச்சுக்களில் விடுதலைப்புலிகள் கலந்துகொள்ள முடியாது என தெரிவித்தமை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தையிலும், ஒஸ்லோவில் நடைபெறவிருந்த பேச்சுக்களிலும் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளாதமை - பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பதை விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்துக்கு வெளியிட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் அரசியல் அபிலாசையை நிறைவேற்றும் பொருட்டு குற்றச்செயல்களையும், பயங்கரவாதத்தையும் பயன்படுத்தி வருகின்றனர்.

அரசியல் மற்றும் மனிதாபிமான விடயங்கள் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளது.

தமிழீழ அரசு என்பது வெறும் கனவு. நோர்வேயில் அரசாங்கத்துடன் நடத்தப்படும் சமாதானப் பேச்சுவார்த்தை தவிர ஒட்டுமொத்த சமாதான செயற்பாடுகளில் தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர்.

ஐரோப்பிய ஒன்றியம் உட்பட சர்வதேச நாடுகள் சில விடுதலைப் புலிகளை தடைசெய்துள்ளதன் மூலம் அந்த இயக்கம் தமிழ்மக்களின் தனித்தரப்பு அல்ல என்பது தெட்டத் தெளிவாக தெரிகிறது என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரு படையினரை...

முகாம் திரும்பியுள்ளனர். காணாமல் போன இரு படையினரையும் தேடும் பணிகள் இடம்பெற்றுவருவதாக இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

## துறைமுகங்களின்...

அதிகாரசபை பாதுகாவலரும் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும், துறைமுகங்களின் நாளாந்த பணிகள் வழமைபோன்று இடம்பெறும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல்வழி மற்றும் தரை வழியாக துறைமுகங்களுக்குள் செல்லும் படகுகள் மற்றும் வாகனங்கள் அனைத்தும் 24 மணி நேரமும் கடுமையான சோதனைக்குட்படுத்தப்படும் எனவும் அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## பேசாலை...

பயிற்சியையும் இந்த விசேட படகு படையணி கொமாண்டோக்கள் கொண்டிருப்பதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவித்தன.

அதேவேளை-இந்தத் தாக்குதலின்போது 12 கடற்படையினர் உயிரிழந்ததுடன், பல ஆயுததளபாடங்களையும் புலிகள் கைப்பற்றியதாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதலில் கடற்படையினர் தரப்பில் 11பேர் கொல்லப்பட்டதாகவும், மேலும் 8 பேர் காணாமற்போயிருப்பதாகவும் மன்னார் பொலிஸ் தலைமையக அதிகாரி சுதத் அஸ்மடல தெரிவித்தார்.

## ஹெலிகளை...

நிலையில் மீட்கப்பட்ட இந்தக் குண்டுகள், நீருக்கடியில் வெடிக்க வைக்கக்கூடிய அதிசக்தி வாய்ந்தவையாகும்.

இந்தக் குண்டுகளைப் பொருத்தி, ஹெலிகளை ஏற்றிவரும் கப்பல்களை தகர்க்க முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கலாம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, வடமேற்கு கடற்பிராந்தியத்தில் வழக்கமான ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் கடற்படையின் அதிவேக தாக்குதல் படகு (டோறா) ஒன்றும் தாக்குதல் இலக்காக இருந்திருக்கலாம் என்று மற்றொரு இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

## நோர்வே...

சமதரப்பாக ஏற்கமுடியும் என்ற செய்தியாகத் தான் எமக்குத் தெரிகிறது.

சமதரப்பு என்பதுதான் அத்திவாரம். இதை குலைத்தால் கட்டடம் இடிந்துவிழும். இந்த அத்திவாரத்தை பிளக்கும் முயற்சி இப்போது நடந்து கொண்டிருக்கிறது.

சமாதானக்கட்டடம் இப்போது ஈடாடிக்கொண்டிருக்கிறது. இது நிச்சயம் உடைந்து விழப்போகிறது. அடுத்த கட்டமாக இலங்கைத்தீவு இரண்டாகப் பிரிவது தான் இதற்கான தீர்வாக அமையும் என அவர் தெரிவித்தார்.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான குறுகிய கால விசேட கற்கைநெறிகள்

LINUX @ AIMS

GNU/LINUX Fundamental

- Intalation
- Open Source Introduction
- Shell Scipting
- Command Line Operation
- Networking

15 நாட்களில் புதியதோர் O/S இல் தேர்ச்சி பெற நீங்கள் தயாரா? இணையுங்கள் AIMS உடன்.

Dynamic Web Page Development

- PHP
- MySQL
- Apeche

Program @ AIMS

Program Language இல் உங்களுக்கு மேலதிக பயிற்சி தேவையா? AIMS உடன் இணைந்து குறுகிய காலத்தில் தேர்ச்சி பெறலாம்.

1. VB.Net 2. ASP.Net 3. JAVA

DBMS @ AIMS

Data Base Management Systems Using Oracle 9i

- Introduction to Data Base
- Oracle - Table Creation & Sub Query
- PLSQL - Procedure,Function & Triggers
- Project work & Assignment

ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ரீதியிலான கவனிப்புடன் 15 நாட்களில் DBMSஇல் தேர்ச்சி பெற முடியும்.

SQL Server Administration

- SQL
- Views
- Stored Procedure
- Triggers

Starts on

Batch -I 18.06.2006 காலை 9.00 மணி Batch -II 21.06.2006

AIMS Your Training Partner

மேலதிக விபரங்களுக்கு, இயக்குனர், #118 பலாலிவீதி, திருநெல்வேலி

Center for FOSS & LAMP

## கடற்படைப் படகுகளை...

குண்டுகள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் குண்டுகளை கப்பலின் அடிப்பாகத்தில் காந்தம் மூலம் பொருத்தி விட்டு ரிமோட் கொன்ரோல் மூலம்வெடிக்க வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தக் கடல் கண்ணிவெடிகள் 10 முதல் 15 கிலோ வரையான எடை கொண்டதாகும். இவை மீன்களைக் கொண்டு வரும் குளிரூட்டி வாகனங்கள் மூலம்எடுத்து வரப்பட்டிருக்கின்றன.

கைதுசெய்யப்பட்டவர்கள் அளித்த தகவலின்படி இவர்கள் எட்டு குண்டுகளைக் கொண்டுவந்துள்ளனர். இவற்றுள் பொலிஸார் மூன்றை மட்டுமே கைப்பற்றியுள்ளனர். அவர்களுடைய இலக்கு கற்பிட்டிக்கும் நீர்கொழும்புக்கும் இடையில் பயணம் செய்யும் கடற்படைப் படகுகள் ஆகும்.

கைதானவர்கள் இரண்டு நாட்கள் கடலில் பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்கள் நீருக்கடியில் சென்று கடற்படைப் படகுகளில் குண்டுகளைப் பொருத்தத் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், கடல் கடும் கொந்தளிப்பாக இருந்ததால் தமது முயற்சியைக் கைவிட்டு கரைக்குத் திரும்பினர். அப்பொழுதுதான் பொலிஸார் இரண்டு பேரைக் கைதுசெய்தனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை - கடற்படைப் பேச்சாளர் கொமடோர் பி.டி.கே.தஸநாயக்க கருத்து வெளியிடுகையில் -

முதல் தடவையாக புலிகள் காந்தக் கண்ணிவெடிகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள் நாம் இதற்கு முன்னர் இத்தகைய குண்டுகளை எதிர்கொண்டிருக்கவில்லை எனத் தெரிவித்தார்.

## உசார் நிலையில்...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர்ஆகியோருக்கு பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, வடமத்திய மாகாணத்தின் எல்லைக் கிராமங்களில் வாழும் பொதுமக்களின் பாதுகாப்புக்காக புதிதாக துப்பாக்கிகளை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதென வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் கிங்ஸ்லி எக்கநாயக்க தெரிவித்தார்.

இவர்களுக்கென ஏற்கனவே 600 துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 1000 துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். இந்த எல்லைக் கிராமங்களைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், பாதுகாப்பற்ற கிராமங்களாகக் கருதப்படும் அனைத்துக் கிராமங்களுக்கும் தேவையான பாதுகாப்பை வழங்குமாறு பாதுகாப்புத் தரப்பினருக்கு மகிந்த ராஜபக்ஷ அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

கொங்கொல்லாவ பிரதேசத்தில் நடந்த கிளைமோர் குண்டுவெடிப்பின் பின்னர் அந்தக் கிராமங்களுக்கான பாதுகாப்பை பலப்படுத்துமாறு அங்கு சென்றிருந்தபோது பாதுகாப்புப் பிரிவினருக்கு மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய பாதுகாப்பற்ற கிராமங்களாகக் கருப்படும் யக்கவெவ, ஹல்மில்லாவெவ, கணுகஹவெவ, கொன்கொல்லாவ, நிக்கவெவ ஆகிய கிராமங்களின் பாதுகாப்புக்காக மேலதிக படையினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கெப்பிற்றிகொல்லாவ பகுதியில் பாதுகாப்புக்காக 20 கிலோமீற்றர் நீளமான காவலரண்கள் அமைக்கப்படவுள்ளன. அத்துடன், 800 மீற்றர் நீளமான காட்டுப் பகுதி வீதியோரமாக வெட்டித் துப்புரவு செய்யப்படவுள்ளது. இது தொடர்பாக அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தலைமையிலான குழு நேற்று முன்தினம் அதிகாரிகளு டன் பேச்சு நடத்தியது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.